

# நான் கண்ட மகரிஷி பரஞ்சோதியார்

# குரு வணக்கப் பாடல்

ஜோதி நாதனே பரஞ்சோதி நாதனே
உன் புகழைப் பாட வந்தோம் தேவ தேவனே
... (ஜோதி நாதனே)

குண்டலினி தவத்தினிலே புதுமை காணவே
சுழுமுனையில் பிராண சுகம் காண வந்தோமே ... (2)
உடலும் பொருளும் ஆவியெல்லாம் உமதாகவே
அன்புடனே காணிக்கையாய் படைத்து விட்டோமே
... (ஜோதி நாதனே)

அன்பும் அன்பும் சேர்ந்து நின்று நலத்தைப் பெருக்குதே
உணர்வுடனே உருக்கம் வந்து தொல்லை நீக்குதே
...(2)
அறிவும் அறிவும் ஒன்றிணைந்து சிறப்பு சேர்க்குதே
நினைவும் கருவும் குருவும் சேர்ந்து இன்பம் பெருக்குதே
... (ஜோதி நாதனே)

குற்றமற்ற குணமிருந்தால் குருவைத் தேடலாம்
குறைசொல்லா நெஞ்சமுடன் கருவையடையலாம் ...(2)
அன்புள்ள மனமிருந்தால் தன்னை உணரலாம்
தர்மத்துடன் தானம் செய்தால் சித்தியடையலாம்
... (ஜோதி நாதனே)

மெய்ஞ்ஞானாசிரியர் K. துரைசாமி
உலக சமாதான ஆலயம்
தாப்பா, மலேசியா.

# நான் கண்ட மகரிஷி பரஞ்சோதியார்

* அத்தியாயங்கள் ஒன்று முதல் நான்கு வரை.

* தமிழ்நாட்டில் பிரசுரிக்கப்படும் "உயர் ஞான தீபம்" என்னும் மாத இதழில், ஏப்ரில் **1994**ல் இருந்து தொடர்ந்து வெளிவரும் கட்டுரைகளின் முதல் தொகுப்பு.

* ஆக்கியோன் (Author) :

*IR. WILLIAM BHOOPALA JOSEPH, P.P.T., B.Sc. (Engg,), M.I.E.M., P. Eng.*

*No. 24, TAMAN KUDAMAS,*
*OFF JALAN DAMAI,*
*35000 TAPAH,*
*PERAK, MALAYSIA.*
*(Telephone : 605-4011486)*

***First printing*** : *December, 1994*
: *1,000 copies*

***Second printing*** : *March, 1995*
: *1,000 copies*

*Published by the author on 08-01-1995 in conjunction with the Proclamation of the Era of Goodwill, Peace and Prosperity (Satlnya Yuga) by His Holiness, Maha Maharishi Dr. Paramjothi Mahan at Paramjothi Nagar, Tirumurthi Hills, Coimbatore District, Tamil Nadu, India.*

*Price* : *RM 3.00* *(Malaysia)*
: *Rs 20.00* *(India)*

*PRINTED IN MALAYSIA*

***JELAPANG PRINTING PRESS***
***(Murali Trading Company)***
*No. 449, Taman Silibin,*
*Jalan Jelapang, 30100 Ipoh,*
*Perak Darul Ridzuan, Malaysia.*
*(Telephone : 605-5268855)*

# பொருளடக்கம்


முன்னுரை........................................................ 4

1. எங்கும் நிறைந்தாயே, எங்கு மறைந்தாயோ 5

2. ஞானவள்ளல் பேசுகிறார்.................................. 9

3. அரவணைக்கும் அன்பின் அலைகள் 20

4. சிரிக்குதே ஒரு வெள்ளை ரோஜா 36

பின் குறிப்புகள்................................................ 52

சினம் தவிர்ப்பது எப்படி?.................................. 55

குடும்பப் பெண்களின் நற்பண்புகள்........................ 56

The Era of Peace and Prosperity 57

Let Me Sow Love.............................................. 58

Spreading Divine Joy......................................... 59

# முன்னுரை

"தவயோகசிரோமணி - அருள் ஞான வள்ளல் குருஜி மகா மகரிஷி பரஞ்சோதியார் அவர்களின் 24 நாட்கள் உலக நல மகாதவ வேள்வி நிறைவு விழா" அழைப்பிதழைக் கையில் வைத்துக்கொண்டே இந்த முன்னுரையை எழுதுகிறேன். வேள்வியின் நோக்கத்தை அழைப்பிதழிலிருந்து தெரிந்துகொள்கிறேன்.

உலக நலனுக்காகவும், உலக அமைதிக்காகவும், மனித மனங்களை இணைத்து மனித நேயத்தைக் காக்கவும், ஆன்மநேய ஒருமைப்பாட்டை வலியுறுத்தவும், மண்வளம் காத்து பயிர்வளம் பேணவும், கி.பி. 2000க்குள் சத்திய யுகம் அமைக்கவும் வேண்டி நிகழ்த்தப்பெற்ற இவ்வேள்வி, குருஜி மகான் அவர்கள் மேற்கொண்ட மூன்றாவது பெரிய வேள்வியாகும். இதைப்போன்ற வேள்விகள் உலகம் முழுவதும் நல்ல விளைவுகளைக் கூடிய விரைவில் ஏற்படுத்தும் என்பது உறுதி.

39 ஆண்டுகளுக்கு முன்பு திராவிடக் குடியில் அவதரித்த மகரிஷி பரஞ்சோதியார் உலக மக்களை சத்திய வழியில் அழைத்துச் செல்லும் ஒரு சிறந்த ஞானகுருவாக விளங்குகிறார். அவர் நல்லோர்களைக் காக்கின்றார், தீயோர்களை நல்லவர்களாக மாற்றுகின்றார்; நன்நெறிகளை உலகம் முழுவதும் பரப்பி வருகின்றார். தீயோர்களை அவர் வெறுப்பதில்லை; பாவிகளை அவர் ஒதுக்குவதில்லை; அவருடைய எண்ணம், பேச்சு செயல் அனைத்தும் மனிதனை ஓர் உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கின்றன.

அன்பைப் பற்றி அதிகமாகப் பேசிவரும் குருஜி மகான் எல்லோரிடமும் அன்பு செலுத்துகின்றார். பேரறிவு படைத்த அவர் நம்முடைய அறிவை விருத்தி செய்வதற்கு வழிகாட்டுகிறார். அவருடைய ஆற்றலைக் கண்டு பரவசமடைகிறோம். அவர் அருகில் இருந்தாலே நம்முள்ளங்களில் ஆனந்தம் பொங்குகிறது. அமைதி நிலவுகிறது. இத்தகைய அவதாரப் புருஷனை எங்களுடைய சத்குருவாக அடைந்ததில் என் மனைவியும் நானும் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இக்கட்டுரைகளின் வாயிலாக நான் உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகும் அனுபவங்கள் பலருக்குப் பயனுடையதாக இருக்கும் என நம்புகிறேன்.

**வில்லியம் பூபால ஜோஸஃப்**

24-1-1994, தாப்பா
பேராக், மலேசியா.

# 1 "எங்கும் நிறைந்தாயே, எங்கு மறைந்தாயோ!?"

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு, "சம்பவாமி யுகே யுகே" என்ற பெயரில் சென்னையில் ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது. அப்பொழுது நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்தேன். இந்த நாடகத்தின் பெயர் விநோதமாக இருந்தபடியால், அதைப் பற்றிய விளக்கத்தை நண்பரொருவரிடம் கேட்டேன். "யுகம் யுகமாக நான் அவதரிக்கிறேன்" என்பதே "சம்பவாமி யுகே யுகே" என்ற சம்ஸ்கிருத சொற்களின் பொருள் என்றும், பகவத் கீதையில் வரும் சுலோகத்தின் கடைசி வரி இதுவென்றும் அவர் விளக்கினார்.

சில நாட்களுக்குப் பிறகு இந்த நண்பரின் மூலம் பகவத் கீதையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். சம்ஸ்கிருத சுலோகங்களும் ஆங்கில மொழி பெயர்ப்பும் அடங்கிய சிறிய புத்தகம் அது. ஆனால் அதன் பெரும்பகுதி எனக்குப் புரியவில்லை. புரிந்த சில சுலோகங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை என்னால் முதலில் ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. இருப்பினும், 1964-ஆம் ஆண்டு நான் மலேசியாவுக்குத் திரும்பிய பிறகும் பகவத் கீதையை அவ்வப்போது வாசித்து வந்தேன். 1967-ஆம் ஆண்டு வேறொரு பகவத் கீதையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். அதுதான் சுவாமி சித்பவாநந்தர் அவர்களின் சிறந்த விளக்கத்தோடு குறைந்த விலையில் கிடைத்த "THE BHAGAVAD GITA" என்ற பெரிய நூல். இந்நூலில் சுவாமி சித்பவாநந்தர் கூறிய தெளிவான விளக்கங்கள் என் மனத்தை ஈர்க்கும் விதத்தில் அமைந்திருந்தபடியால் அன்னாரின் கருத்துகள் என் மனத்தில் மெதுவாக வேரூன்ற ஆரம்பித்தன.

கடந்து சென்ற நாட்களை எண்ணிப் பார்க்கும் பொழுது, வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொள்வதற்காக நான் எடுத்துக் கொண்ட பல முயற்சிகள் என் மனக்கண் முன் வருகின்றன. என்னுடைய வாலிப வயதில், "THE CONFESSIONS OF JEAN JACQUES ROUSSEAU", மகாத்மா காந்தியின் "THE STORY OF MY EXPERIMENTS WITH TRUTH", மற்றும் ***"சுப்ரமணிய பாரதியாரின் கவிதைகள்"*** போன்ற நூல்கள் என்னை வெகுவாய்க் கவர்ந்தன. சுவாமி விவேகானந்தரின் வீர உரைகளும் Dale Carnegie அவர்களின் அறிவுரைகளும் புது உத்வேகத்தை

ஊட்டின. பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் அவர்களின் கொள்கைகளிலும் ஈடுபாடு இருந்தது. தவிர, இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கும் திருவள்ளுவரின் குறட்பாக்களில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பு எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தந்தது. மேலும், ரேடியோவில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இனிமையான பாடல்களைக் கேட்கும் பொழுதெல்லாம் மெய்மறந்து போவதுண்டு. அவர்கள் பாடிய "காற்றினிலே வருங்கீதம்", "எங்கும் நிறைந்தாயே, எங்கு மறைந்தாயோ", "வைஷ்ணவ ஜனத்தோ" போன்ற பாடல்கள் என்னைப் பரவசமடையச் செய்தன. இந்தப் பின்னணியில்தான் நான் சில கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தேன்.

* ***"கடவுள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்?",***
* ***"மறுபிறப்பு உண்டா?",***
* ***"இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனின் மனத்தில் எழும் தீய எண்ணங்களுக்கும் இறைவன்தான் காரணமா?",***
* ***"மோக்ஷமும் நரகமும் எங்கிருக்கின்றன?",***
* ***"கடவுள் ஆணா, பெண்ணா அல்லது அலியா?",***
* ***"மனிதனை எதற்காக இறைவன் படைத்தான்?",***
* ***"மனிதனையொத்த ஜீவராசிகள் வேறு கோள்களில் உயிர் வாழ்கின்றனவா?"***

இது போன்ற கேள்விகளுக்கு விடை காணாமல் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில்தான் தத்துவ விசாரணையில் ஈடுபட ஆரம்பித்தேன். இதற்கு வித்திட்டவர் என் தந்தையார், காலஞ்சென்ற திரு. ஆசீர்வாதம் ஜோஸஃப் அவர்கள் ஆவார்.

தத்துவ விசாரணை செய்யச் செய்ய, அறிவு விருத்தியடைவதை உணர்ந்தேன். ஆனால், ***"எதை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்தவன் ஆக முடியும்?"*** என்ற கேள்விக்கு புத்தகங்களிலிருந்து ' கிடைத்த பதில்கள் திருப்தியைத் தரவில்லை. எங்கும் நிறைந்த இறைவன் எங்கோ மறைந்துவிட்டானே, அவனை அடைவதற்கு வழிதான் என்ன என்று ஆழமாக சிந்திக்கத் தொடங்கினேன்.

1985-ஆம் ஆண்டு, ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்கள் எழுதிய ***"ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்"*** என்ற நூலை வாசிக்க ஆரம்பித்தேன். புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் சில மூச்சுப் பயிற்சிகளையும் செய்து வந்தேன். ஒரு நாள் இந்தப்

பயிற்சியை செய்து கொண்டிருக்கும் பொழுது, திடீரென்று என் மனத்தில் விவரிக்க முடியாத, இதுவரைக்கும் அனுபவித்திராத ஒரு பேரானந்தம் ஏற்பட்டது. சுமார் பத்து வினாடிகள்தான் இந்தப் பேரானந்தம் நீடித்தது. மீண்டும் இந்த அனுபவம் கிடைக்குமா எனப் பல தடவை முயற்சித்தும் கிடைக்கவேயில்லை. இதற்கிடையில், **"ஆத்ம *சாதகனுக்கு* ஒரு *சத்குரு* தேவை"** என்ற வாசகம் என் மனத்தை வாட்டிக் கொண்டே இருந்தது. சுவாமி விவேகானந்தரை ஏற்கனவே என்னுடைய மானசீக குருவாக ஏற்றுக் கொண்டிருந்ததால் அவரையே நினைத்து தியானம் செய்ய ஆரம்பித்தேன். ஆனால், மனத்தை ஒரு நிலைப் படுத்த முடியவில்லை. தியானம் செய்வதிலும் மூச்சுப் பயிற்சி செய்வதிலும் சரியான முறைகளை நான் கடைப்பிடிக்கவில்லையென நினைக்கிறேன். ஏனெனில் 1986, 1987, 1988-ஆம் ஆண்டுகளில் என்னுடைய உடலில் ஒரு பாதிப்பு உண்டாயிற்று. பிடரிப் பகுதியில் அடிக்கடி வலி ஏற்பட்டது. அங்குள்ள நரம்புகள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு முடிச்சுப் போட்டு வைத்தது போல் இருந்தன. இரண்டாண்டுகள் விலையுயர்ந்த மருந்துகள் சாப்பிட்டும் பூரண நிவாரணம் கிடைக்கவில்லை. மூளைக் கழலையாக (BRAIN TUMOUR) இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், 6-10-1987ல் செய்யப்பட்ட Computerised Axial Tomographic Scan மூளையில் கட்டி ஒன்றும் இல்லை என்பதை உறுதிப்படுத்திற்று.

1989-ஆம் ஆண்டு பரமஹம்ஸ யோகானந்தர் எழுதிய "AUTOBIOGRAPHY OF A YOGI" என்ற நூலை வாசித்து மனநிறைவு அடையும் பாக்கியம் கிடைத்தது. இவற்றின் சில பகுதிகளை இரண்டு, மூன்று தடவைகள் வாசித்தேன். ஆன்மீகத்துறையில் எனக்கு வழிகாட்டும் ஞானாசிரியர்களில் ஒருவராக பரமஹம்ஸ யோகானந்தரை ஏற்றுக்கொண்டு, அவரால் ஸ்தாபிக்கப் பட்ட SELF-REALIZATION FELLOWSHIP என்ற இயக்கத்தில் என்னை ஒரு மாணவனாகப் பதிவு செய்து கொண்டேன். கலிபோர்னியாவில் இருந்து, மாதத்திற்கு இருமுறை அவர்கள் அனுப்பிய பாடங்களை பய பக்தியோடு படித்து பயன் அடைந்தேன். இயேசு கிறிஸ்துவின் போதனைகளோடு இந்து மதத்தின் உயர்ந்த தத்துவங்களை இணைத்து ஓர் உன்னத சமரச சன்மார்க்கத்தைப் போதித்த பரமஹம்ஸ யோகானந்தரை நேரில் காணக் கொடுத்து வைக்கவில்லையே என நொந்துகொள்வேன். (5-1-1893ல் அவதரித்த யோகானந்தர் 7-3-1952ல் மஹாசமாதி அடைந்தார்).

இந்தக் காலக்கட்டத்தில்தான் எனது மனைவியும் (திருமதி புஷ்பராணி ஜோஸஃப்) ஆன்மீகத்துறையில் சற்று ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்கள். பரமஹம்ஸ யோகானந்தரின் நூல்களை

அவர்களும் விரும்பிப் படிப்பதைப் பார்த்து நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். எங்களுடைய எண்ணங்களும் பேச்சுகளும் ஆன்மீகத்துறையை நோக்கிச் செல்வதை நாங்களிருவரும் நன்றாக உணர்ந்தோம். இந்த மாற்றத்தைக் கண்ட நண்பர்களும் தங்களுடைய பிரச்சனைகளை எங்களோடு பகிர்ந்து கொண்டனர். **"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுகிறது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது"** என்று சாலமோான் ஞானியின் தந்தையாகிய தாவீது அரசன் கூறியதைப்போன்று, எங்கள் ஆத்துமா சத்தியத்தை வாஞ்சித்து இறைவனை நோக்கிக் கதற ஆரம்பித்தது.

இதற்கிடையில், 1989-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், **"ஆனந்த மார்க்கம்"** என்ற இயக்கத்தைச் சேர்ந்த ஓர் அமெரிக்கக் குரு, எங்கள் ஊரிலுள்ள காந்தி மண்டபத்தில் சில சொற்பொழிவுகள் ஆற்றினார். தியானத்தைப் பற்றியும் குண்டலினி சக்தியைப் பற்றியும், விஞ்ஞான ரீதியில் எடுத்துரைத்தார். குண்டலினி சக்தியின் மகத்துவத்தைப் பற்றி அவரிடமிருந்து ஓரளவு தெரிந்துகொள்ள முடிந்தது. SIR JOHN WOODROFFE என்பவர் எழுதிய, "THE SERPENT POWER" என்ற நூலைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவர் ஒரு முக்கியமான உண்மையைத் தெரிவித்தார். அதாவது, **"பல நூல்களை ஆராய்ச்சி செய்து குண்டலினி சக்தியைப் பற்றி எழுதி விடலாம். ஆனால் குண்டலினி சக்தியை அனுபவப்பூர்வமாக உணர்வது என்பது வேறு. சத்குரு ஒருவரிடமிருந்துதான் நாம் அதைப் பெற்றுக்கொள்ள முடியும். சுயமுயற்சியால் உறங்கிக்கிடக்கும் குண்டலினியை மேலெழுப்ப முடியாது"** என்றார். இவரைச் சந்தித்தப் பின் சத்குருவைத் தேடுவதில் நான் அதிக கவனம் செலுத்திய போதிலும், என் எண்ணங்களைப் புரிந்துகொண்டு என்னைத் தேடி ஒரு சத்குரு வர மாட்டாரா என்று ஏங்கினேன்.

# 2 ஞானவள்ளல் பேசுகிறார்

எங்கள் ஊரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் பீடோர் என்னும் சிறு பட்டணம் உள்ளது. பீடோரிலுள்ள துன் சம்பந்தன் தமிழ்ப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வரும் திரு. கு. துரைசாமி(1) அவர்கள் தனது ஆன்மீக அனுபவங்களை அவ்வப்போது என்னிடம் கூறி வந்தார்கள். ஒருமுறை, தமிழ்நாட்டிலுள்ள சித்ரமுத்து அடிகள் எழுதிய புத்தகத்தை வாசிக்கக் கொடுத்தார்கள். செய்யுள் நடையில் அமைந்திருந்த இந்த நூலில் பல நல்ல கருத்துக்கள் இருந்த போதிலும் அவற்றில் எதுவும் புதுமையானதாகவோ அல்லது என்னுடைய சிந்தனையைத் தூண்டுபவனவாகவோ அமையவில்லை.

சில மாதங்களுக்குப் பிறகு, அதாவது அக்டோபர் 1991ல், மீண்டும் ஒரு புத்தகத்தைப் பற்றி திரு. துரைசாமி என்னிடம் கூறினார்கள். அதுதான் ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள் எழுதிய **"நான் - கடவுள்"** என்னும் நூல். உலக சமாதான ஆலயத்தின் முந்நாள் பொதுக்காரியதரிசி, திரு. C. R. கோதண்டராம் அவர்களின் பதிப்புரையோடு 1954ல் வெளியிடப்பட்ட இந்த நான்காம் பதிப்பை Photostat பண்ணி (Xerox copy) எடுத்து வைத்திருந்தார்கள். இந்த நூலை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து ஆர்வத்தோடு வாசிக்க ஆரம்பித்தேன். நூலாசிரியரான ஞானவள்ளல்(2) முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவர் என்றும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு குண்டலினி தீட்சை கொடுத்தவர் என்றும், அவர் இப்பொழுது உயிரோடில்லை யென்றும் கூறினார்கள். தவிர, இந்த உலக சமாதான ஆலயத்தைச் சேர்ந்த குருஜி ஒருவர் 1991ம் ஆண்டுத் துவக்கத்தில் மலேசியாவுக்கு வருகை புரிந்தார் என்றும் சொன்னார்கள்.

**"நான் - கடவுள்"** என்னும் நூலை வாசிப்பதற்கு முன்பு, பொருளடக்கத்திலுள்ள தலைப்புகளைக் கண்ணுற்றேன். "குண்டலினியால் ஏற்படும் நன்மைகள்" என்ற தலைப்பு என்னைக் கவர்ந்ததால் உடனே அந்தப் பகுதியை வாசிக்க ஆரம்பித்தேன்.

***"சாதாரண மக்களுக்கு நாளடைவில் நல்லெண்ணத்தை உண்டாக்கி, உலக மக்களோடு ஒத்து வாழுதற்குரிய அறிவுத் திறமையை நல்குவதுடன், தீயசெயல்கள் செய்ய நினைக்கும் போது, மனத்தில் அச்சத்தை உண்டாக்கி, நற்செயல்கள் செய்யத்***

***தூண்டுகிறது. சிற்சில வியாதிகளும், அடிபடுவதால் ஏற்படும் சிறு காயங்களும் நாளடைவில் நீங்கி விடுவதுடன் எதையும் அளவோடு முறையாக அனுபவிக்கச் செய்கிறது."***

***"பல நூல்கள் கற்றும், பல பயிற்சிகள் செய்தும், அதனால் பயனடையாது, அறிவு தெளிவடையாது தத்தளித்து மயங்கி நிற்போர்கள் நமது ஆலயத்தில் சேர்ந்து, குண்டலினி தீட்சை பெற்று, பேரின்ப நிலை எய்தி, தத்துவ ஆராய்ச்சியை அறிந்து கொண்டதும் உடனே மகிழ்ந்து, இந்தப் பேரின்ப நிலைக்கு மேல் வேறொரு பெரிதான இன்பநிலை இல்லை என்று அறிவில் தெளிந்து, மயக்கம் நீங்கி, நிம்மதியடைகிறார்கள்."***

***"குண்டலினியால் பேரின்ப நிலையை அடைதற்கு பிரமச்சரிய விரதம், தனி இடம், ஜெபம், பிராணாயாமம் தேவையில்லை. சொல்லுகின்ற, கேட்கின்ற நுண்ணறிவும், நுட்பமாக நோக்கும் திறமையும் இருந்தால் போதுமானது."***

குண்டலினி தீட்சையைப் பெற்றுக் கொண்டால் பேரின்ப நிலை எய்தலாம் என்ற வார்த்தைகள் எனக்கு அதிக மகிழ்ச்சியை அளித்தன. ஆனால், இந்தப் பேரின்ப நிலையை அடைதற்கு தனியிடம் தேவையில்லை, ஜெபம் தேவையில்லை, பிராணாயாமம் தேவையில்லை என்று கூறும் நூலாசிரியர், புதுமையாக ஒன்றைக் கூற வேண்டும் என்பதற்காக இப்படி எழுதினாரா அல்லது இவற்றையெல்லாம் சுயமாக அனுபவித்து உணர்ந்து எழுதினாரா என்ற சந்தேகம் என் மனத்தில் எழுந்தது.

பொருளடக்கத்துக்குப் பக்கத்திலுள்ள அவருடைய புகைப் படத்தைப் பார்த்து அவர் எப்படிப்பட்டவராக இருந்திருக்கக்கூடும் என எடை போட்டுப் பார்த்தேன். கருப்புச் சட்டையணிந்து, சித்தாசனத்தில் அமர்ந்துகொண்டு உலகத்தையே சற்று அலட்சியமாகப் பார்க்கும் இந்த நூலாசிரியரை என் மனம் உடனே பரமஹம்ஸ யோகானந்தரோடு ஒப்பிட்டுப் பார்த்தது. "ஏன் இவரும் நீண்ட முடி வைத்திருக்கிறார்? முடியை வெட்டிக் கொண்டால் இவர்களுடைய சக்திகள் ஒடுங்கிவிடுமோ, என்னவோ, தெரியவில்லையே. கருப்புச் சட்டை ஏன் அணிய வேண்டும்? முஸ்லிம் மதத் தலைவர்கள் கருப்பு அணிவதைப் பார்த்திருக்கிறேன். GREEK ORTHODOX CHURCH மத குருக்களும் கருப்பு அங்கி அணிந்து தங்கள் கடமைகளைச் செய்வதை ஏதன்ஸ் நகரத்திலுள்ள தேவாலயங்களில் பார்த்திருக்கிறேனே. தாந்திரீகப் பயிற்சியில் ஈடுபடுபவர்களும் கருப்பு உடைதான் அணிவார்களோ? ஒரு வேளை, இவர் Sufi என்று அழைக்கப்படும் இஸ்லாமிய மறை மெய்ஞ்ஞானியோ? அப்படியென்றால் உருது அவருடைய தாய் மொழியோ? அதனாலென்ன; எனக்கு வேண்டியதெல்லாம் என்னை மென்மேலும்

உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும் உன்னதத் தத்துவங்கள்தானே" என எண்ணினேன்.

புத்தகத்தின் இதரப் பகுதிகளையும் அன்றிரவே வாசிக்க ஆரம்பித்தேன். **"கடவுளைக் கண்ணால் பார்க்க வேண்டுமானால், கண்ணுக்கு முன்னால் எது தெரிகிறதோ, அதுவே கடவுளாகும்"** என்று சொல்கின்றாரே ஞானவள்ளல், இது ஒரு மாந்திரீக வித்தையைப் போலல்லவா இருக்கிறது. இவருடைய கூற்றை ஏற்றுக் கொண்டால், எறும்பிலிருந்து யானை வரை, தேன்சிட்டிலிருந்து பிணந் தின்னும் கழுகு வரை, கொலைகாரனிலிருந்து அருள்ஞானி வரை, யோகியிலிருந்து எய்ட்ஸ் நோயாளி வரை, ஏழையிலிருந்து கோடீஸ்வரன் வரை, பாலைவனத்திலிருந்து நீர்ச்சோலைகள் வரை, தவமியற்றும் யோகாலயத்திலிருந்து பேரிடர் விளைவிக்கும் பூகம்பம் வரை, எல்லா ஜீவராசிகளும் இயற்கைச் சம்பவங்களும் பொருட்களும் கடவுளாக அல்லவா இருக்க வேண்டும். "கடவுள் எங்கே? கடவுள் எங்கே?" என்று தேடிக் கொண்டிருக்கின்றேனே, நான் தேடிக்கொண்டிருக்கும் கடவுள் ஒரு வேளை எதிர்வீட்டுக் குழந்தையின் புன்சிரிப்பிலும், அன்னை தெரெஸாவின் தன்னலமற்றச் சேவையிலும், உண்மை பக்தனின் நிஷ்காமியப் பிரார்த்தனையிலும் இருக்கின்றாரோ, அல்லது ஏழையின் வயிற்றுப் பசியிலும், தொழிலாளியின் வியர்வையிலும், அபலையின் கண்ணீரிலும், மத வெறியனின் காழ்ப்புணர்ச்சியிலும் ஒளிந்துகொண்டு வேடிக்கை பார்க்கின்றாரோ என எண்ணினேன்.

இந்தக் கடவுள் தத்துவத்தை அடுத்த இரண்டு வாரங்களுக்கு அலசிப் பார்க்கும் பொழுது மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் (3) பாடலில் இருந்து ஒரு விளக்கங் கிடைத்தது.

***"காக்கைச் சிறகினிலே நந்தலாலா! - நின்றன்***
***கரியநிறந் தோன்று தையே, நந்தலாலா!***
***பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்தலாலா! - நின்றன்***
***பச்சை நிறந் தோன்று தையே, நந்தலாலா!***
***கேட்கு மொழிலி லெல்லாம் நந்தலாலா! - நின்றன்***
***கீத மிசைக் குதடா, நந்தலாலா!***
***தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா! - நின்னைத்***
***தீண்டு மின்பந் தோன்றுதடா நந்தலாலா!"***

"கடவுள் எப்படி இருக்கிறார்" என்ற கேள்விக்கு, "நீயாக, நானாக, நாமாக, ஏகனாக, அனேகனாக எல்லாப் பொருளுமாக கடவுள் இருக்கின்றார்" என்று ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள் கூறிய பதில் என் சிந்தனையில் மேலும் தெளிவை ஏற்படுத்திற்று.

பஞ்ச பூதங்களால் ஆன இப்பிரபஞ்சத்தையும் அனைத்து

ஜீவராசிகளையும் இயக்கும் சூத்திரதாரியான இறைவனைப் பற்றி அவனை ருசித்து பார்த்தவர்கள் என்ன சொல்லிச் சென்றார்கள் எனவும் சற்று ஆராய்ந்தேன். சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு திருவாதவூரில் பிறந்து, பாண்டிய மன்னனுக்கு ஆலோசனை கூறும் அமைச்சராக இருந்து கொண்டே சிவநெறியிலே தீவிரமாகச் சென்று, ஓர் உன்னத வாழ்க்கை நடத்திய மாணிக்கவாசகர் பாடிய பாடல்களில் சில என்னைக் கவர்ந்திழுத்தன.

***"இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே***
***அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்***
***சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே***
***ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே***
***ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே***
***கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்***
***நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே***
***போக்கும் வருவும் புணர்வுமிலாப் புண்ணியனே."***

இந்தப் பாடல்களுக்கு ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்(4) அவர்கள் அளித்துள்ள விளக்கம், இறைவனின் குணாதிசயங்களை நன்கு புரிந்துகொள்ள பெரிதும் உதவிற்று.

"நீ பரம்பொருள் ஆதலால் உனக்கு இன்பமும் துன்பமும் இல்லை. ஆனால் உயிர்கள் அனைத்துமாய் நீ இலங்குவதால் அவ்வுயிர்கள் அனைத்தின் இன்ப துன்பங்கள் உன்னுடையவைகளாம். உன்னை வழுத்துபவர்க்கு நீ முற்றிலும் சொந்தமாகின்றாய். நீ உலகனைத்துமாயிருக்கிறாய். ஆயினும், அதனால் உன் நிஜ சொரூபம் சிறிதேனும் மாறவில்லை."

"முரண்பாடுகளெல்லாம் உன்னிடம் கூடுகின்றன. நீ ஆத்ம ஜோதி; கட்புலனாகாத இருள். தோன்றியுள்ள பெருமை, தோன்றாப் பெருமையாகிய அனைத்தும் உனக்கே சொந்தம். சகுண பிரம்மம் என்னும் நிலையில் நீ பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு ஆதிமூலம். இறுதியில் அது உன்னிடத்து ஒடுங்குகிறது. இடைநிலையிலும் அது உன்னிடத்திலேயே இருக்கிறது. நிர்க்குண பிரம்மம் என்னும் நிலையில் இந்த விகாரங்கள் உன்னை வந்து தொடுவதில்லை."

"ஈசா, நீ வலிய வந்து என்னை இழுத்து ஆட்கொண்டுள்ளாய். நீ எனக்குத் தந்தையாகவும் இறைவனாகவும் இருக்கின்றாய். மிக்க கூர்மையான மெய்ஞ்ஞானம் படைத்திருப்பவர்களே உன்னை உள்ளவாறு உணர்ந்து கொள்வார்கள்."

***"ஊனக்கண் கொண்டு காணமுடியாது. ஆனால் தெளிந்த மனக்கண்கொண்டு உன்னைக் காணலாம். அந்தக் கரணம் அல்லது மனக்கண் பண்படுதற்கு ஏற்ப நீ நன்கு***

***உணரப்படுகின்றாய்".***

"பூரணனாகிய நீ எங்குமிருப்பதால் உனக்குப் போதல் வருதல் பிற பொருளைச் சேர்தல் என்பன இல்லை. கலப்பதற்கு வேறு பொருள் ஒன்றும் இல்லாததால் நீ யாண்டும் புனிதமாகவே இருக்கிறாய். ஆதலால் நீ புண்ணியன். நீ சுத்த சிவம்."

இந்தத் தெளிவான விளக்கத்தால் என்னுடைய அறிவு தூண்டப் பட்டதோடல்லாமல், இது போன்ற மற்ற விளக்கங்களை வாசித்தபின் ஏற்பட்ட அறிவின் பெருக்கத்தால் சர்வவியாபியான இறைவனை ஓரளவு அறிந்துகொள்ள வழி பிறந்தது.

ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள் கடவுளைப் பற்றி மாத்திரம் எழுதாமல், உயர் தர்ம நெறிகளைப் பற்றியும் அதிகம் எழுதியுள்ளார்கள். நற்பண்புகள் உள்ளோரே பெரியோர் என்பதை பல இடங்களில் வலியுறுத்திக் கூறும் ஞானவள்ளல், மனிதன் தன் குற்றத்தை உணர்ந்து, திருந்தி, பயன்படும் கடமைகளைச் செய்ய முற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், "சமய சந்தர்ப்பங்களினால் ஏற்படும் இடையூறுகளினால் தனது ஒழுக்கம், உயர்நடை, நீதி, குணம் ஆகிய பண்புகளில் எவர் நீங்காதிருக்கிறாரோ, அவரே பெரியோர் எனப்படுவர்" என்கிறார் அவர்.

பரஞ்சோதி மகான் அவர்கள் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை இந்நூலிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்றோம். ஆனால் அவருடைய கருத்துக்களை தெய்வ வாக்காக எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இவர் போதித்தத் தத்துவங்களை நாஸ்திகக் கொள்கைகள் என்று பலர் ஒதுக்கிவிடவுங் கூடும். இருப்பினும், இந்த நூலை மீண்டும் இருமுறை வாசித்த பிறகுதான், "நான் - கடவுள்" போன்ற புத்தகத்தை ஒரு சாதாரண மனிதன் எழுதியிருக்க முடியாது என உணர முடிந்தது.

ஞான வள்ளல் அவர்களின் சாதனைகளைப் பற்றி சற்று சிந்திக்கும்பொழுது, மக்கள் மனத்தில் அவர் நல்லெண்ணங்களை விதைத்தார், அவர்களுக்கு குண்டலினி தீட்சையைக் கொடுத்து, சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அவர்களுடைய உள்ளங்களில் மலரச் செய்தார் என்பதை நன்கு புரிந்து கொள்கிறோம். ***உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டுமென்றால், ஆட்சி செய்பவர்கள் மெய்ஞ் ஞானத்தைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். தேவையற்ற உருவ வழிபாடுகள், தேவையற்ற ஜாதி, மத பேதங்கள் ஒழிய வேண்டும். எந்த நாட்டில் விளைந்த உணவுப் பொருளானாலும் அதை எல்லா மக்களுக்கும் அவரவர் தேவைகளுக்கு ஏற்ப பகிர்ந்துக் கொடுக்கக் கூடிய நேர்மையான,***

***திறமைமிக்க உலக நிர்வாகம் அமைய வேண்டும். அன்றுதான் உலக சமாதானம் பிறக்கும்*** என்று வீரமுழக்கம் செய்த பரஞ்சோதி மகான் அவர்களின் உன்னதத் தத்துவத்தையும் புரிந்து கொள்கிறோம்.

வரையறையின்றி வாரி வழங்குவோரை வள்ளல்கள் என அழைக்கின்றோம். கர்ணனும் பாரியும் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரும் பெரும் வள்ளல்களே. பொருளை வாரி வழங்காது உயர் ஞானத்தை மட்டுமே வாரி வாரி வழங்கிய அரும்பெரும் வள்ளல்தான் பரஞ்சோதி மகான் அவர்கள். குண்டலினி தீட்சையின் வாயிலாக உயர் ஞானத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், ***"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"*** என்ற அடிப்படையில் மற்றவர்களோடு இந்த இன்பத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் வழி வகை செய்தார். தவிர, "ஞானம் என்றால் என்ன?" என்பதற்கு நல்ல விளக்கமும் கொடுத்துள்ளார்.

***"அறிந்தறிந்து விடுவது ஞானம்***
***அறிந்தறிந்து கொள்வது ஞானம்***
***அறிந்தறிந்து அறிவது ஞானம்***
***அறிந்தறிந்து தெளிவது ஞானம்."***

சமூகத்திலுள்ள சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி, மக்களை நல்வழிக்கு அழைத்துச் செல்லும் நூற்றுக்கணக்கான கருத்துக்கள் இந்த நூலில் இருக்கின்றன. ஞானவள்ளல் கூறுகிறார் : "ஏழைகளாய் இருந்து மேல் பதவிக்கு வந்த வாய்ப்பை, மக்களின் வறுமைத் துன்பங்களை நீக்கப் பயன்படுத்த வேண்டும். இன்றுவரை உலகத்தில் தோன்றிய மதங்களும், அரசியல் ஆட்சியும் நல்ல பலனைத் தராமல் இருந்துவிட்டன. தம்தம் இன ஒற்றுமையின் உயர்வைக் காட்ட பேராரவாரஞ் செய்யும் மதத் தலைவர்களும் தம்தம் இனத்திலே உள்ள ஏழை மக்களின் துன்பங்களை நீக்க இதுவரை செய்ததொன்றுமில்லை. பொந்தில் வாழும் புழு, பூச்சி, வண்டு, எறும்பு, நண்டு, எலி, பாம்புக்கும் உள்ள காற்று இடவசதி கூட இந்த எளிய மக்களுக்கு இல்லையே."

"மனிதனுக்கு எதனால் துன்பம் ஏற்படுகிறது?" என்ற கேள்விக்கு அவர் தரும் பதில் நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. ***"செலவுக்கு வேண்டிய வருவாய் இல்லாத குறையாலும், வருவாய் மிகுதி யாய் இருந்து அளவு மீறிய உணவால் வியாதிகளும், செலவுக்கு வேண்டிய வருவாய் இருந்தும் மிகுதியாய் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையாலும், கடவுளின் தத்துவம் அறியாத சந்தேகத்தா லுமே துன்பம் ஏற்படுகின்றன,"*** என்று கூறுகிறார், ஞானவள்ளல்.

அறியாமையினால் ஏற்படும் துன்பத்தைப் போக்குவதற்கு ஒரு சிறந்த வழியை பிரம்ம காயத்ரீ நமக்குக் காட்டுகிறது. **"யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ, அந்தச்சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக"** என்கிறது இந்த மந்திரம். நம்முடைய அறிவைத் தூண்டக்கூடிய ஞானவொளிக் கற்றைகள் பலவற்றை பரஞ்சோதி மகான் அவர்களின் நூலில் நாம் காணலாம். எடுத்துக்காட்டாக கீழ்க்காணுபவற்றைக் கூறலாம்.

(1) **கனியைப் போன்றது ஆன்மா; வாசனையைப் போன்றது அன்பு. அழகு போன்றது அருள், சுவையைப் போன்றது அறிவு.**

(பக்கம் 8)

(2) **மனிதனின் நினைப்பின் விரிவு எங்கும் நிறைந்து இருக்கிறது. அதை அறியக்கூடிய தன்மை அவரவர் அறிவைப் பொறுத்ததே.**

(பக்கம் 15)

(3) **ஒன்றும் அறியாதபோது கடவுளாகவே இருக்கிறீர்கள். அறிவின் பெருக்கத்தின் இடைநடுவே தன் அறியாமை, மடமை, மயக்கம் இவைகளால் வேறொரு கடவுளிருப்பதாகத் தேடுகிறீர்கள்; தோன்ற வைத்துப் பார்க்கிறீர்கள். அறிவின் பெருக்கத்தின் தெளிவில் நீங்களே கடவுளாக இருப்பதை அறிந்தபின் எல்லாம் கடவுளாக இருப்பன என்று அறிந்து கொள்கிறீர்கள்.**

(பக்கம் 24)

(4) **பெய்கின்ற மழை நீரில் எவ்வித அழுக்குமில்லை. நிலத்தில் வீழ்ந்த பின்னரே அது நிலத்தின் தன்மைக்கேற்ப அழுக்காகி, சுவையிலும், நிறத்திலும், மாற்றமடைகின்றன. அதேபோல் எல்லாருடைய உயிரும் தூய்மையானதே; ஆயினும் அவரவர்களுடைய குணத்தாலும், அறிவாலும் அநேகவிதக் குறைகளுக்கு ஆளாகின்றனர். கெட்ட நீரும் சூரிய வெப்பத்தால் சுத்தமாகிப் பின் மழையாகப் பொழிவது போல், தன் குற்றத்தைத் தாமே உணர்ந்து பயன் படும் கடமைகளைச் செய்ய முற்படுங்கள்.**

(பக்கம் 27)

(5) **சூரியனின் வெப்பம் குறைந்த பாகங்களிலே உள்ள நச்சுயிர்களுக்கு நச்சுச் சக்தி குறைவே. இதைப்போன்று உடலில் தவ உருக்கக்கனல் உள்ளவர்களுக்கும், மூலக்கனல் உள்ள தவக்குருக்களுக்கும் சொல்லில் விஷசக்தி உண்டு. அதனால் குருக்களிடத்திலேயோ, மற்றப்**

பெரியோர்களிடத்திலேயோ உண்மைக்கு மாறாக நடக்காதீர்கள்.

(பக்கம் 30)

(6) சூரியனை மேகம் மறைப்பதுபோல் உங்கள் ஐயப்பாடு அறிவின் விளக்கத்தை மறைக்கிறது. வெளிச்சத்தைச் சுவர் தடுத்துக் கொள்ளுதல் போல் உங்களுடைய அறிவின் விளக்கத்தைப் பகைமை தடுத்துக் கொள்ளுகிறது.

(பக்கம் 31)

(7) ஒரு மணிக்கு 1,132 மைல் வேகத்தில் போகக்கூடிய இயந்திரம் சரியாக நேர் மேற்கு திசை செல்லுமானால், அதில் இருப்பவருக்குப் புறப்பட்ட மணி நேரமே எந்த இடத்திலும் எவ்வூரிலும் இருக்கும்.

(பக்கம் 41)

(8) ஒரு பலாச்சுளையை ஈரறிவுள்ள புழு சாப்பிடுமானால் புழுவாகவும், மனிதன் சாப்பிடுவானானால் மனிதனாக வும் மாறுகிறது. கெட்ட மனிதன் உண்ணும் உணவு கெட்ட அறிவாகவும், நல்ல மனிதன் உண்ணும் உணவு நல்ல அறிவாகவும் உலகில் பரவுகிறது.

(பக்கம் 46)

(9) மார்பில் இடதுகை மேல் வலது கையும், வலது காலின் மேல் இடது காலும் வைத்து மல்லாந்து படுப்பதில் மிக நன்மையுண்டு. உடம்பில் நோய் ஏற்பட்டால் மேற்கண்டபடி மல்லாந்து படுத்து, உடம்பு அசையாது, இரு புருவ மத்தியில் உள்ள சுழிமுனையில், அரை மணி நேரம் நினைவு வைத்தால் உடனே தூக்கம் வந்து நோய் தீரும்.

(பக்கம் 71)

(10) ஆடுகளும், மாடுகளும், மான்களும், யானைகளு.ம் ஒன்றுகூடிப் பெருங்கூட்டமாக மேய்ந்திட்ட போதிலும், அங்கு அஞ்சாத நெஞ்சம் கொண்ட சிறுத்தை, புலி, சிங்கம் ஒன்று வந்தால் சிதறி வெருண்டு எல்லாம் ஓடுவதுபோன்று. நற்குணம், புத்தி, ஆராய்ச்சி, அறிவு பெருகியபோது மடமை, சினம், காமம், உட்பகை யாவும் ஒழிந்து, ஈசனாகப் பிரகாசிப்பீர்கள்.

(பக்கம் 83)

பிறர் குற்றத்தைக் குற்றம் என்று நினையாது, தான் எக்குற்றமும் செய்யாது, அதனால் தான் பெரியோன் என்று

நினையாது இருப்பதே பெருந்தன்மையாகும்.

(பக்கம் 84)

(12) மிகுந்த நல்லெண்ணம் உங்களிடமிருக்குமானால், ஒழுக்கம், சகிப்புத்தன்மை, பொறுமை, பெருந்தன்மை ஆகிய பண்பாடுகள் இயல்பாகவே மிகுதிப்படுவதுடன், கட்டளை (ஆக்ஞை) பிறப்பிக்க வீரமும் திறமையும் உண்டாகிவிடும்.

(பக்கம் 99)

(13) ஒரு நல்ல கண்ணாடியின் முன் நின்று, தன் முகத்தையே பார்த்து, "நான் நல்லொழுக்கமாக வாழ்வேன், நான் எண்ணிய காரியங்களை முடிப்பேன்" என்று ஒருவன் தினம் சொல்லிக் கொண்டு வருவானானால் சிறிது நாளில் தன் துர்செயல்களை விடுத்து, ஒழுக்கமாக வாழ்வதுடன், அவன் எண்ணிய காரியங்களைச் செய்தே முடிப்பான்.

(பக்கம் 118)

(14) வருந்துவதெல்லாம் வல்லமைக் குறைவே. கிடைக்கும் துணிவை உணர்தல் வேண்டும். நடந்ததெல்லாம் அனுபவத்தில் உள்ளது. நடந்ததெல்லாம் நன்மையென்று கருதுவதினால் நடக்கப் போவதெல்லாம் நன்மையாகவே முடியும்.

(பக்கம் 123)

(15) என் சொற்களெல்லாம் உலகத்தில் உள்ள எல்லாக் கேள்விகளுக்கும் சமாதானம் செய்து விடை அளித்த பின்பே வெளிவந்துள்ளன. ஆகையால் உன் கேள்வி எதுவானாலும் பதில் இதிலேயே இருக்கிறது.

(பக்கம் 149)

(16) பசியோடிருக்கும் மனிதனும் பட்டினியாயிருக்கும் வேங்கையும் எதிரெதிரே சந்தித்தால், இமையா வல்லமையுடைய கண்களே வெற்றிகொள்ளும். கூர்ந்த பார்வையால் எதிரியை வெல்லலாம்; அநேக வியாதிகளையும் நீக்கலாம்.

(பக்கம் 192)

(17) இடுப்புக்குக் கீழ் சிறுநீர்த் துவாரத்திற்கும், மலத் துவாரத்திற்கும் இடையேயுள்ள மூலாதாரத்தில் ஊறும் விந்தாகிய குண்டலினி சக்தியை முதுகந்தண்டு எலும்புக்குள் உள்ள மிகச்சிறிய துவாரத்தின் உள்ளே கூடிப் பிடரிப் பின் புறத்திலிருந்து நெருப்பாறு மயிர்ப்பாலம் என்னும் ரம்பப் பற்களைப்போல் சேர்ந்துள்ள சிரசின் நடு உச்சி மண்டை ஒட்டுக்குள், உள் வழியாகக் குருவின் பரிச

***உணர்ச்சியாலும், நுட்ப விவேகத் திறமையாலும், குண்டலினியை எழுப்பிக்கொண்டு வந்தால் நெற்றிக்கண் திறக்கப்படுகிறது.***

(பக்கம் 194)

இந்த அருமையான நூலை வாசித்து முடித்தப் பிறகு, பலவித எண்ணங்கள் என் மனத்தில் உதித்தன. "அநேக சோதனைகள் செய்து குண்டலினி சக்தியை எழுப்பும் உபாயத்தைக் கண்டு பிடித்த நூலாசிரியர் இப்பொழுது உயிரோடில்லையே, இவரைப் போன்று குண்டலினி சக்தியை எழுப்பக்கூடியவர்கள் வேறு யாரும் உயிரோடு இருக்கின்றார்களா? அப்படி இருந்தால் அவரை நான் எங்கு, எப்படிச் சந்திப்பது? திருமணம் செய்து கொண்டு பிள்ளைக் குட்டிகளோடு வாழ்ந்த இவரால், மற்ற ரிஷிகளும் மகான்களும் மடாதிபதிகளும் கூறத் துணியாத கருத்துக்களை எங்ஙனம் கூற முடிந்தது? இப்படிப்பட்ட உயர்ந்த தத்துவமும் குண்டலினி தீட்சையும் மக்களுக்குக் கிடைக்கிறதென்றால், அதைப் பற்றி பலர் கேள்விப்பட்டிருக்க வேண்டுமே! நான் இன்னமும் அதைப்பற்றிக் கேள்விப்படவில்லையே, செய்தித்தாள்களிலும் படிக்கவில்லையே, ஏன்? குண்டலினி தீட்சையைப் பெற்றுக்கொண்ட பிறகு, உடலில் இருக்கிற பல வியாதிகள் போய்விடும் என்று ஞானவள்ளல் கூறுகின்றாரே, ஒரு வேளை இந்த வியாதிகள் சில காலம் மறைந்திருந்து விட்டு மீண்டும் கூடுதல் வேகத்தோடு தீட்சை பெற்றுக் கொண்டவரைத் தாக்குமோ? அல்லது காம இச்சையைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்குமோ?"

இத்தகைய கேள்விகள் என் மனத்தில் சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்திய போதிலும், குண்டலினி தீட்சையை எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது. இந்த ஆர்வத்திற்கிடையில் சந்தேகங்களும் எழுந்தன. "உலக சமாதான ஆலயத்தைச் சேர்ந்த ஒரு குருஜி 1991ம் ஆண்டு துவக்கத்தில் மலேசியா வந்து சென்றதாக திரு. துரைசாமி அவர்கள் கூறினார்களே. அந்த குருஜிக்கும் குண்டலினி தீட்சை கொடுக்கக்கூடிய சக்தி இருக்குமோ? இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வரும் எல்லா குருஜிகளையும் சுவாமிகளையும் நம்ப முடியவில்லையே, இந்த குருஜியை மாத்திரம் எப்படி நம்புவது? குண்டலினி தீட்சை என்பது இவ்வளவு சுலபமாகக் கிடைக்கக் கூடியது என்றால், நமது முன்னோர்களால் ஏன் இதை எளிதில் பெற்றுக்கொள்ள முடியாமற் போய்விட்டது?" எனக் கேட்டுக் கொண்டே இக்கேள்விகளுக்குத் திருப்திகரமான பதில்களையும் தேடிக்கொண்டிருந்தேன்.



ஞானவள்ளல் பரஞ்சோதி மகான்
**GNANAVALLAL PARANJOTHY MAHAN**

# 3 அரவணைக்கும் அன்பின் அலைகள்

இரவில் உறங்குவதற்கு முன்பு ித்த வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியை வாசித்துவிட்டு ஜெபம் செய்தபின் தூங்குவதுதான் என் மனைவியின் பழக்கம். 1990ம் ஆண்டிலிருந்து இந்தப் பழக்கத்தில் சிறு மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றத்தை ஏற்படுத்தியவர் பரமஹம்ஸ யோகானந்தர்(5). இவர் எழுதிய, "THE DIVINE ROMANCE", "MAN'S ETERNAL QUEST" என்னும் நூல்களை என் மனைவி விரும்பி வாசிக்க ஆரம்பித்ததிலிருந்து, இந்தப் புத்தகங்களிலிருந்து ஒரு பகுதியை வாசித்த பின்புதான் தூங்குவார். 7-2-1992 வெள்ளிக்கிழமை இரவு கீழ்க்கண்ட பகுதியை வாசித்துவிட்டு உறங்கியிருக்கிறார்.

"If one is sincere in his search for truth, God helps him to find a book or a teacher to inspire and encourage him. When the seeker is deeply in earnest, God sends him a guru. A guru is a God-knowing person who has been divinely appointed by Him to take the seeker as a disciple and lead him from the darkness of ignorance to the light of wisdom. Through the guru's pure perception, God teaches the devotee."

அன்றிரவு அவர் கண்ட கனவை, மறுநாள் (சனிக்கிழமை) காலை, நான் வேலைக்குப் போவதற்கு முன்பு என்னிடம் சொன்னார். "நீங்கள் வேலைக்குச் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள். வீட்டுக்கு முன்னாலுள்ள பெரிய இரும்புக் கதவை வழக்கம்போல் திறந்துவிட்டு, சற்று வெளியே வந்து எட்டிப் பார்க்கிறேன். இதே தெருவிலுள்ள ஒரு வீட்டிற்கு முன்னால், ஆள் உயரத்தில் பிரேம் போட்ட ஒரு பெரிய படம் வைத்திருக்கிறார்கள். படத்தில் இருப்பவர் பரமஹம்ஸ யோகானந்தர்தான். கழுத்தில் மாலை போட்டவாறு எடுக்கப்பட்ட படம். படத்திற்கு முன்னால் வயோதிகத் தம்பதிகள் குனிந்து மலர் தூவுகின்றனர். கணவர் வேஷ்டி கட்டியிருக்கிறார். அந்த அம்மா, பிராமணப் பெண்கள் கட்டுவதைப் போல் புடவை கட்டியிருக்கிறார்கள். யோகானந்தருடைய உருவம் எனக்கு நன்றாகத் தெரிந்தது" என்றார்.

சிரித்தவாறே, "இது நல்ல கனவுதான். கூடிய சீக்கிரத்தில் பரமஹம்ஸ யோகானந்தர் உன்னைத் தேடி வந்துவிடுவார்" என்று கூறிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டேன்.

இரண்டு நாட்கள் கழித்து, அதாவது 9-2-1992-ஆம் தேதி

ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழரை மணிக்கு திரு. துரைசாமி அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து சுமார் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த ஒளிநாடாவை பற்றிய சில விபரங்களையும் என்னிடம் கூறினார்கள்.

உலக சமாதான ஆலயத்தைச் சேர்ந்த குருஜி என்பவர் மூன்று வாரமாக சாப்பிடாமல் தவ வேள்வியில் இருந்தார் என்றும், அவருடைய எடை சிறிதுங் குறையவில்லையென்றும், ஆன்மிக சக்தி நிறைந்த இந்த குருஜியின் தவ வேள்வி நிறைவு விழாவில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட இந்த ஒளிநாடாவை நான் அவசியம் பார்க்க வேண்டும் என்றும் சொன்னார்கள். மேலும், இந்த குருஜி சில நாள்களுக்கு முன்புதான் மலேசியா வந்தடைந்தார் என்றும், அவர் இந்தியாவுக்குத் திரும்பி செல்வதற்குள் நான் அவரை சந்திக்க வேண்டுமென்றும் கூறிச் சென்றார்கள். அவர்கள் கூறிய விஷயங்களை சற்று நேரம் ஆர்வமில்லாமல் கேட்டுக்கொண்டிருந்த என் மனைவி, "தியானம் செய்யப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு தன்னுடைய அறைக்குள் சென்று விட்டார். ஆனால் அவரால் சரியாக தியானம் செய்ய முடியாததால், ஐந்து நிமிடங்களில் அறையை விட்டு வெளியே வந்து மற்ற அலுவல்களை கவனித்துக்கொண்டிருந்தார்.

திரு. துரைசாமி அவர்கள் போனபிறகு, இந்த குருஜியைப் பற்றி என் மனைவியிடம் பேச ஆரம்பித்தேன். என் மனைவியோ நான் பேசியதை விரும்பிக் கேட்கவில்லை. "இந்த விஷயத்தில் உங்களுக்கு ஒரு உறுதியான சிந்தனை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தியாவில் இருந்து ஆன்மீகத் தலைவர்கள் யார் வந்தாலும் போய்ப் பார்க்க வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். முன்பு பிரதர் தினகரனுடைய கூட்டத்திற்குப் போனீர்கள். பிறகு என்னவென்றால், பரமஹம்ஸ யோகானந்தருடைய போதனைகள்தான் நல்லதென்று சொன்னீர்கள். அதற்கப்புறம், ஆனந்த மார்க்கத்தைச் சேர்ந்த அந்த அமெரிக்கக் குருவிடமிருந்து, தீட்சையும் பெற்றுக் கொண்டீர்கள். இப்பொழுதோ, இந்த குருஜியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். வேண்டுமென்றால், அவர் கொடுத்துவிட்டு போன வீடியோவை நீங்கள் போட்டுப் பாருங்கள் அல்லது கோலாலம்பூருக்குச் சென்று உங்கள் குருஜியை நேரில் போய்ப் பார்க்க வேண்டு மென்றாலும் போய்ப் பாருங்கள். எனக்கும் இதுக்கும் சம்பந்தம் கிடையாது. எனக்கு பரமஹம்ஸ யோகானந்தருடைய போதனைகளே போதும். இதைப்பற்றி நான் அதிகம் பேச் விரும்பவில்லை. எனக்கு வேலைக்கு நேரமாகிறது..." என்று சற்று காட்டமாக பேசிவிட்டு, இரவு எட்டே முக்கால் மணிக்கு மருத்துவமனைக்குச் சென்றுவிட்டார். தாப்பா மருத்துவமனையில் ஸ்டாஃப் நர்ஸாக பணிபுரியும் என் மனைவி புஷ்பராணி, அப்பொழுது இரவுப் பணியில், அதாவது இரவு 9.00 மணி முதல் மறுநாள் காலை 7.00 மணி வரை வேலை செய்து கொண்டிருந்தார்.

அன்றிரவே திரு. துரைசாமி அவர்கள் கொடுத்த ஒளிநாடாவை போட்டுப்பார்த்தேன். 7-1-1992 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மேல் எடுக்கப்பட்ட இந்த வீடியோவின் ஆரம்பப் பகுதியில், வெள்ளையுடை அணிந்த பள்ளிக்குழந்தைகள் கைகளில் பூக்களை ஏந்தியவண்ணம் குருஜியின் வருகைக்காக ஆவலோடு காத்துக் கொண்டு நிற்கின்றனர். குழந்தைகளுக்குப் பின்னால் நின்றுக் கொண்டிருக்கும் பள்ளி ஆசிரியைகளின் கைகளிலும் பூக்கள். குருஜி நடந்து வரப்போகும் பாதை நெடுகிலும் வண்ண மலர்கள். ஆங்காங்கே பலூன் ஏந்திய சிறுவர்கள். பெரும்பாலான ஆண்களும் பெண்களும் கொடி போட்ட வட்ட பேட்ஜுகளை அணிந்துள்ளனர். யானை ஒன்று அமைதியாக நின்றுகொண்டு வேடிக்கைப் பார்க்கிறது. "உலக சமாதான பேரணி, ஈரோடு" என்ற எழுத்துக்கள் பொரித்த வெள்ளைத்துணி யானையின் முதுகில் அசைந்தாடுகிறது. யானைக்கு சற்று தூரத்தில் ஒரு குதிரை. குதிரைக்குப் பக்கத்தில் ஒரு வேன் (Van).. அதில், " DIVINE MATRICULATION SCHOOL. உன்னை நம்பு" என்ற வாசகம். எலுமிச்சம் பழங்களோடு ஒருவர் வேகமாக நடந்து வருகிறார். வேறொருவர் மெர்ஸிடிஸ் பென்ஸ் காரில் இருந்து இறங்குகிறார். ஜனங்கள் அனைவரும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றார்கள் 21 நாள்கள் தவவேள்வி செய்த குருஜியை, நேராங் கருதி மீண்டும் அவதரித்த ஒரு தேவனாக இவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்களோ?

குரு கீதம் இசைக்கப்படுகிறது.

**"குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஷ்வரஹ |**
**குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ ||"**

**गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः ।**
**गुरुः साक्षात् परं ब्रह्म तस्मै श्री गुरवे नमः ।।**

சற்று நேரங்கழித்து, அதாவது மாலை 5.09 மணிக்கு, குருஜி பானம் அருந்தி தனது வேள்வியை முடித்துக் கொள்கிறார். அவருக்கு முன்பாக கும்பம், தேங்காய், புஷ்பங்கள் போன்ற மங்களப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. குருஜி மெதுவாக பேச ஆரம்பிக்கின்றார். "குருவே சரணம்! என் உள்ளம் குளிர்ந்தது போன்று இந்த உலக மக்களின் உள்ளங்களெல்லாம் குளிர்ந்து, மக்கள் ஒன்றுபட்டு, சுபிட்சத்தோடும் சந்தோஷத்தோடும் நிறைவோடும் வாழட்டும்." என்று கம்மிய குரலில் அருளாசி வழங்குகின்றார்.

சரியாக மாலை மணி 5.30க்கு குருஜி மேடையை நோக்கி நடந்து வருகிறார். காலில் வெள்ளைச் சப்பாத்து, இடுப்பில் வெள்ளை

வேஷ்டி, மேலங்கியும் வெள்ளைதான். சிவந்த மேனி, வசீகரிக்கும் கண்கள், சிரித்த முகம், தோள்வரை நீண்ட முடி, இன்னமும் சரியாக வளராத தாடி. வயது 35-ல் இருந்து 40க்குள் இருக்கும். உயரம்.....? என்னுடைய உயரந்தான் இருப்பார் போல் தெரிகிறது. (5 அடி 3 அங்குலம்). மலர் மீது நடந்து வரும் குருஜியின் பாதங்களில் பள்ளிக் குழந்தைகளும் ஆசிரியைகளும் மலர்களைத் தூவி வரவேற்கின்றனர். எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி தெரிகிறது. சற்று தூரத்தில் பட்டாசுகள் வெடிக்கும் சப்தம் கேட்கிறது.

"குருவின் உள்ளமே கருணை இல்லமே" என்ற பாட்டை குழந்தைகள் பாடி முடிப்பதற்கும், குருஜி மேடையில் வந்து அமர்வதற்கும் சரியாக இருக்கிறது. ஆனால் சற்று நேரத்திற்குள் மேடையிலுள்ள எல்லோரும் மேடையை விட்டு கீழிறங்கி வந்து, சிரித்துக் கொண்டே சமாதானப் புறாக்களை பறக்க விடுகின்றனர். அப்புறாக்களும் சமாதானத்தை நிலைநாட்டும் தூதுவர்களாக பறந்து செல்கின்றன. அதன்பிறகு எல்லோரும் சேர்ந்து உலக சமாதான ஆலயத்தின் இலக்குரையை (Slogan) கூறுகின்றனர்.

***"வளர்க மெய்ஞ்ஞானம், வாழ்க சமாதானம்***
***உலக நலம் காப்போம், உலக அமைதி காப்போம்.***
***கி.பி. இரண்டாயிரத்திற்குள் சத்திய யுகம் அமைப்போம்.***
***சந்தோஷம்.***
***எங்கும் அமைதி, எதிலும் அமைதி;***
***அமைதி, அமைதி, அமைதி."***

இதையடுத்து, "பெருஞ்சோதியும் அணுவில் ஒடுங்கி" என்ற பாட்டையும், "குருவே யாவுமாய்" என்று தொடங்கும் பாட்டையும் இரண்டு பெண்கள் பாடுகின்றனர். பாடல்களைத் தொடர்ந்து பலர் பேசுகின்றனர். அவர்கள் பேசுவதை ஆழ்ந்து கவனிக்கிறார் குருஜி. குருஜியை நான் டெலிவிஷன் ஸ்க்ரீனில் ஆழ்ந்து கவனிக்கிறேன். அவருடைய நெற்றியில் விபூதி இல்லை. கழுத்தில் ருத்ராக்ஷ மாலை இல்லை. இமயமலைக் காடுகளில் விளையும் இந்த ருத்ராக்ஷக் காய்களுக்கு மனக் குற்றங்களையும், முத்தோஷங்களையும், பாவங்களையும் போக்கும் சக்தி உண்டென்று சிவாகமங்கள் கூறுகின்றனவே; வெண்மை நிற விபூதி, அஷ்ட ஐசுவர்யங்களைத் தருவதோடல்லாமல், உலக வசீகரத்தையும் சாந்தத்தையும் கொடுக்கும் என்றும், அணியாதவர்களுக்குத் தீங்கு நேரும் என்றும் புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவே, இவற்றை அறியாதவரா குருஜி? அறிந்திருந்தும், ஆசாரங்களையும் சம்பிரதாயங்களையும் மீற வேண்டும் என்ற வைராக்கியமா, அல்லது தனக்குள்ளே, தன் சொந்த முயற்சியாலும் தன் குருவின் கருணையாலும் தேக்கி வைத்திருக்கும் அந்தத் தெய்வீகக் குண்டலினி சக்தி, இந்த ருத்ராக்ஷக் காய், திருநீறு ஆகியவைகளை அணிவதினால் கிடைக்கும் சக்தியை

விட பன்மடங்கு அதிகம் என்ற அனுபவப்பூர்வமான நம்பிக்கையா? ஒரு கட்டத்தில், கண்களை மூடிய நிலையில் பார்வையை மேலே செலுத்தியவாறு குருஜி பேச்சைக் கேட்கிறார். அவரை மீண்டும் உற்றுக் கவனிக்கிறேன். என்னையறியாமல் எனக்குள் அவர் மீது ஒருவித மரியாதை ஏற்படுகிறது.

மேடையில் அமர்ந்திருப்போர் அனைவரும் பேசுகிறார்கள். அவர்களுடைய உரைகளில் நல்ல கருத்துக்கள் மிளிர்கின்றன. அவற்றில் சில இதோ.

(1) இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் தென்கோடிப் பகுதியில் இருந்து ஓர் ஒளி தோன்றி உலகம் முழுவதும் பரவும் என்று தனது தீர்க்கதரிசனத்தில் நாஸ்த்ராடமஸ்(6) (NOSTRADAMUS) சொல்லி இருக்கின்றார். அவர் சொன்ன ஒளி இன்று இங்கு தோன்றிவிட்டது.

(2) நம் குருஜி போன்ற மகான்கள் இன்னும் நாட்டில் இருக்கின்ற காரணத்தினாலேயேதான் அமைதி கொஞ்சமாவது இருக்கின்றது என்று நான் நினைக்கிறேன்.

(3) உலக நாடுகள் எவ்வளவுதான் விஞ்ஞானத்தில் முன்னேறிய போதிலும், அமைதி வேண்டுமானால் இந்தியாவிற்குத்தான் வருகின்றார்கள். அமைதியில்லாத வாழ்க்கை வெற்று வாழ்க்கை, சூனியமான வாழ்க்கை என்பதை நம்முடைய குருஜியைப் போன்றவர்கள் நமக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

(4) மதிப்பிற்குரிய குருஜி அவர்கள் இந்த 21 நாட்கள் தனித்தவத்தை தனக்காகவா மேற்கொண்டார்? இந்த உலகத்தை சத்திய உலகமாக மாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம்தான்.

(5) ஒருவன் உடலாலும், உள்ளத்தாலும், ஆன்மீகத்தாலும், சமூகச் சூழ்நிலைகளிலும் நல்ல நிலையில் இருக்கும் போதுதான் அவன் ஆரோக்கியமானவன் என்று கூற முடியும்.

(6) இந்த உலகில் ஏன் பிறந்தோம், எதற்காக வாழ்கின்றோம், ஏன் இப்படி அவஸ்தைப் படுகின்றோம் என்ற கேள்விகளுக்கெல்லாம் பகவத் கீதையில் விடை கிடைக்கின்றது.

(7) மனிதனாக இருந்து அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து, மகானாக மாறவேண்டும் என்பதுதான் ஆன்மீகத்தின் நோக்கம்.

(8) மனிதன், எண்ணங்களினால் ஆன கூட்டுப் பொருளே. நல்ல எண்ணங்களே நல்ல மனிதனை உருவாக்குகிறது. கெட்ட எண்ணம் கெட்ட விளைவுகளையே ஏற்படுத்துகிறது.

(9) குருவின் திருநாமத்தை செப்பிக் கொண்டேயிருந்தால் தெளிவு

கிடைக்கும். குருவின் திரு உருவத்தை நெஞ்சிலே நினைத்துக் கொண்டிருந்தாலே தெளிவு கிடைக்கும்.

(10) நான் கோவையில் இருந்தபொழுது உடல் நலக் குறைவால் செயலிழந்தேன். நமது குருஜி மகான் பரஞ்சோதியார் அவர்கள் ஈரோட்டிலிருந்து எனக்கு சக்தியை அளித்தார்கள். அதை நான் பெற்றிருக்கின்றேன். அவர்கள் புதுப்பித்த எனது உணர்வு என்னைப் பலப்படுத்தியது.

(11) இல்லறத்தில் இருந்துகொண்டே இந்த குண்டலினி சக்தியினால் வாழ்க்கையை செம்மைப்படுத்திக்கொள்ள முடியும் என்பதை உறுதியாக என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குருஜி பேசுவதற்குத் தயாராகிறார் அவருக்கு முன்னால் மேசையின் மீது தண்ணீர், வாழைப்பழம், ஆப்பிள், திராட்சை மற்றும் மலர்க்கொத்துகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேடைக்குப் பின்னால், பச்சை எழுத்துக்களில் "சந்தோஷம்" என்ற வாசகம் எழுதப்பட்ட கொடி ஒன்று தொங்குகிறது. அதில் சூரியனும், சந்திரனும், நக்ஷத்திரமும் காணப்படுகின்றன. பிளாஸ்டிக் போத்தலிலிருந்து தண்ணீர் அருந்துகிறார் குருஜி. அவர் பேசுவதற்கு முன்பு, ஒரு சகோதரி மேடையிலேறி வணக்கப் பாடலொன்றைப் பாடுகிறார்.

***"எத்தனைப் பாட்டுக்கள் எப்படிப் பாடினால்***
***என் மீது உன் மனம் இரங்குமோ இறைவா.....***
***எத்தனைப் பாட்டுக்கள் இறைவா, இறைவா, இறைவா..."***

பாடகி இனிமையாகவும் உருக்கமாகவும் பாடுகிறார். அவர் சத்தமாகவும் பாடுவதால் பாடல் தெளிவாகக் கேட்கிறது. "அம்மா, நீ நல்லா இருக்கணும்.... மேலும் மேலும் இசையில் உயர்ந்து உன்னத நிலையை அடைய வேண்டும்...." என்று என் மனம் கூறிக் கொள்கிறது.

"அன்பின் அலைகளும், இறையருளின் ஆற்றலும், கண்ணுக்குப் புலனாகாத நல்லெண்ண உயரலைகளின் ஆற்றலும் இந்த அரங்கம் முழுவதும் நிறையட்டும்" என்று கூறி தனது அருளுரையை ஆரம்பிக்கின்றார் குருஜி. ரேடியோ, டி. வி. அலைகளைப் போன்று எண்ண அலைகளும் கண்ணுக்குப் புலனாகாதவை என்பதை இது வலியுறுத்துகிறது.

***"அமைதியை, ஆனந்தத்தை மனிதன் புறத்திலேயே தேடிக் கொண்டு இருக்கிறான். ஆனால் இந்த சந்தோஷம் புறத்தில் இல்லை, அவனது அகத்திலேயே உள்ளது"*** என்கிறார் குருஜி. உண்மைதான். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை போன்ற

ஆசைகளின் நச்சுப்பிடிகளில் சிக்காதவர்கள் வெகு சிலரே. மண்ணும், பெண்ணும், பொன்னும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடும். ஆனால், அவன் தேடும் அமைதியைக் கொடுக்காது என்பதை சுட்டிக் காட்டுகிறார் குருஜி. அமைதியை நாடுபவன் ஆசைகளை விட்டொழித்து, தன் எண்ணங்களை உள் நோக்கி செலுத்த வேண்டும். இங்ஙனம் ஒருவன் தன்னைத்தானே அறிந்துகொள்ள முற்படும்போது, அவனுடைய ஐம்புலன்களையும் கட்டுப்படுத்துவதற்கான வழியை ஒரு குரு அவனுக்குக் காண்பிக்கின்றார். குரு காட்டிய வழியில் அவன் செல்லும் போது அமைதியைப் பெற்றுக் கொள்கிறான்.

"உலகம் உறங்குகின்ற வேளையில் ஞானிகள் விழித்திருப்பார்கள், இரவுக் காவலர்களைப் போல; ஏனென்றால் இரவில்தான் உங்களுடைய மனோபாவங்கள் வெளிப்படுகின்றன" என்று கூறும் குருஜியின் வார்த்தைகளை சற்று அலசிப் பார்க்கும் பொழுது, குருஜியைப் போன்ற தவ சிரேஷ்டர்கள் ஆவியுருவில் சஞ்சாரம் செய்யக்கூடிய விதிமுறைகளை அறிந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொள்கிறோம். ஒரு குறிக்கோளோடு இரவு வேளைகளில் இப்படி சஞ்சரிக்கும தவஞானியின் ஆன்மா, மற்ற ஆன்மாக்களுக்கு வழிகாட்டியாக செயல்படுகிறது. மறு பிறப்பெடுக்க காத்துக் கொண்டிருக்கும் ஆன்மாக்களை தகுந்த இடங்களுக்கு அழைத்துச் சென்று நல்ல கருவில் உருக்கொள்ளச் செய்கிறது.

"நீங்கள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபடும் போதெல்லாம் உங்கள் கோரிக்கைகளையெல்லாம் அங்கேயே விட்டு விட்டு வருகின்றீர்கள். அவைகள் எல்லாம் எங்கே செல்கின்றன? தவசிகளையும் தீர்க்கதரிசிகளையும் உலக நன்மைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருப்பவர்களையும் தான் வந்து அடைகின்றன" என்ற கருத்தைப் புரிந்துகொள்வது சற்று சிரமமாக இருந்தாலும், அதைப் பற்றி சிந்திக்கும் பொழுது அதில் ஆழ்ந்த உண்மை இருப்பதை உணர முடிகிறது. பல ஒலிபரப்பு நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் இனிய பாடல்களையும் செய்திகளையும் எப்படி ஒரு நல்ல ரேடியோ பெற்றுக் கொள்கின்றதோ, அதைப்போன்றே பல நல்ல உள்ளங்களில் உதிக்கும் எண்ணங்களையும் பிரார்த்தனைகளையும் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் தவஞானிகளுக்கு உண்டு. மேலும், ஒரு சக்தி வாய்ந்த ஒலி/ஒளி பரப்பு நிலையம் போல் செயல்படும் தவஞானியால் பக்தர்களுடைய மனத்தில் தனது எண்ணங்களை விதைக்கவும், அவர்களுடைய கனவில் தோன்றி தரிசினம் கொடுக்கவும் முடியும்.

குருஜியின் அருளுரை கேட்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கிறது. பொருள் பொதிந்த ஆழமான தத்துவங்களை அவர் எளிய சொற்களால் விளக்குவதைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய மனிதனின் தேவைகள் என்னென்ன என்பதை அவர் நன்கு தெரிந்து வைத்திருப்பதனால்தான், "சுமைகளைத் தூக்கிக்

கொண்டு நீங்கள் படிகளில் ஏற வேண்டியதில்லை. எஸ்கலேட்டர் என்ற ஒன்றைக் கண்டுபிடித்து இருக்கின்றேன். நீங்கள் காலை எடுத்து வைத்தால் போதும். அது உங்களை மேலே கொண்டு வந்து நிறுத்திவிடும்" என்கிறார் குருஜி. விமான நிலையங்களிலும் சூப்பர் மார்கெட்டுகளிலும் காணப்படும் ESCALATORகளை அவர் குறிப்பிடவில்லை. இந்த ஆன்மீக எஸ்கலேட்டரில் பயணம் செய்ய வேண்டுமென்றால் எஸ்கலேட்டரின் முதற் படியில் ஏறி நிற்க வேண்டும். "புறத்தில் அலைகின்ற இந்த மனத்தை, உங்கள் உள்புறமாக, உணர்வாக இருக்கும் என்புறம் திருப்ப வேண்டும்" என்கிறாரே குருஜி, அதுதான் இந்த ஆன்மீக எஸ்கலேட்டரின் முதற்படி.

எஸ்கலேட்டரின் முதற்படியில் ஏறி நிற்கச் சொன்ன குருஜி, "சும்மா இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்" என்றும் நம்மைக் கேட்டுக் கொள்கிறார். அசையாமல் ஓரிடத்தில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்து, "அவர் சும்மா இருக்கிறார்" என்று சொல்வது உலக வழக்கு. ஒரு மனிதனின் அங்கங்கள் அசையாவிட்டாலும் அவனுடைய மனம் சதா தாவிக் கொண்டே இருக்கிறது. தாவித்திரியும் இந்த மனக்குரங்கை, "ஸோஹம்" என்னும் மந்திரத்தை உச்சரித்து கட்டுப்படுத்த பலர் ம்முயன்றிருக்கிறார்கள். பத்மாசனத்திலோ, சித்தாசனத்திலோ அல்லது வஜ்ராசனத்திலோ அமர்ந்து, கண்களை மூடிய நிலையில், சாதாரணமாக மூச்சை விட்டுக்கொண்டே, திருஷ்டியை புருவத்திற்கு மத்தியில் முதலில் வைக்க வேண்டும். பின்பு, மூச்சை உள்ளுக்கு இழுத்து முடிக்கும் போது "ஸோ" என்றும், மூச்சை வெளியே விட்டு முடிக்கு போது "ஹம்" என்றும் மனதுக்குள்ளேயே உச்சரிக்க வேண்டும். மூச்சின் மீதே கவனத்தை செலுத்தியவாறு காலையில் 15 நிமிடங்களும் இரவில் 15 நிமிடங்களும் செய்து வரவேண்டும். இப்பயிற்சியை வெறும் வயிற்றில் தொடர்ந்து செய்து வரும்பொழுது, மனத்தை ஓரளவு அடக்க முடிகிறது. மனத்தில் அமைதி குடிகொள்கிறது. மகிழ்ச்சியும் பிறக்கின்றது. இதையே "ஹங்ஸோ" என்ற மந்திரமாக மாற்றியும் ஜெபம் செய்பவர்களும் உண்டு.

குருஜி பேசும் பொழுது அவருடைய கைகள் கோர்த்த நிலையிலேயே இருக்கின்றன. அவர் நிதானமாகப் பேசுகிறார். சிரித்துக் கொண்டே பேசுகிறார். எந்த மதத்தையும் தாக்காமல் பேசுகிறார். அவருடைய பேச்சிலிருந்து அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லவும் முடியவில்லை. ஒரு வேளை இவரும் மதங்களுக்கு அப்பாற்பட்டவரோ, கடவுளைப் போல. ஒரு தாய் எப்படி தன் குழந்தைகளை அரவணைத்துக் கொள்வாளோ, அதைப் போன்றே அவருடைய அன்பின் வார்த்தைகள் நம்மை அரவணைப்பதை உணர முடிகிறது. "இந்த மனிதனை எனக்குப் பிடித்திருக்கிறது. இவரை நான் நம்பலாம்" என்று என் உள்மனம் தீர்மானிக்கிறது.

குருஜி தொடர்ந்து பேசுகிறார். "கடந்து கடந்து இருக்கக்கூடிய அந்த கடவுள் நிலையைக் காண்பதற்கு மனிதனுக்கு மிகப்பெரிய கண்ணை இயற்கை அளித்து இருக்கின்றது. அந்தக் கண்தான் நெற்றிக் கண், ஞானக்கண், மூன்றாவது கண்; அந்தக் கண்ணின் மூலமாக ஒரு மனிதன் தன்னையும் இந்த உலகத்தையும் கடந்து கடந்து செல்ல முடியும்." குருஜியின் சொற்களைக் கேட்டவுடன் லொப்ஸாங் ரம்பாவை நினைவு கூர்ந்து கொள்கிறேன். லொப்ஸாங் ரம்பா (LOBSANG RAMPA) சிறு பையனாக இருந்த பொழுது அவருடைய நெற்றியில் கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு ஒரு துவாரமிட்டு அவருடைய நெற்றிக் கண்ணைத் திறந்தார்கள் என, "THE THIRD EYE" என்ற நூலில் அவர் விவரித்துள்ளார். ஆனால் எவ்வித கூர்மையான ஆயுதமுமின்றி, எவ்வித சஸ்திர சிகிச்சையுமின்றி, எளிய வழியில், குண்டலினி சக்தியை தட்டி எழுப்புவதன் மூலம், ஒருவருடைய நெற்றிக்கண்ணைத் திறக்கும் முறையை ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள், "நான் - கடவுள்" என்னும் நூலில் கூறியுள்ளார்கள். "ஞானவள்ளலைப் போல் இந்த குருஜியாலும் குண்டலினி தீட்சையைக் கொடுக்க முடியும் போல் தெரிகிறதே. கூடிய *சீக்கிரத்தில்* இவரைச் சந்தித்து இதைப் பற்றியெல்லாம் மனந்திறந்து பேசவேண்டும். இவரிடமிருந்து தீட்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்" என எண்ணுகிறேன்.

இந்த குண்டலினி தீட்சையை, முப்பிணியை நீக்கும் மருந்து என்று குறிப்பிடுகிறார் குருஜி. "உடல்பிணி, உளப்பிணி, உயிர்ப்பிணி என்ற முப்பிணியை நீக்கும் மருந்தை எனக்குக் கொடுத்து இருக்கிறார்கள். என் இருதயச் செல்வங்களே! அந்த மருந்தை நீங்களும் உட்செலுத்திப் பாருங்கள். அந்த மருந்துக்காக நீங்கள் கடை ஏற வேண்டியதில்லை." கடையேறாமலேயே கிடைக்கும் இந்த குண்டலினி தீட்சையைப் பெற்றுக்கொண்ட ஒருவர், குரு சொற்படி குண்டலினி தியானத்தில் முழுமையாக ஈடுபடும் பொழுது, உடலிலுள்ள உறுப்புகளும் சுரப்பிகளும் நன்றாக இயங்க ஆரம்பிக்கின்றன என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்கிறார். உதாரணத்திற்கு நம் கணையம் நன்றாக இயங்கி, போதிய அளவு இன்சுலினை சுரக்கும்பொழுது உடலிலுள்ள நீரிழிவு நோய் படிப்படியாக மறைகின்றது.

உடலை எப்பொழுதும் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசுகிறார் குருஜி. ***"பாத்திரமாகிய உங்கள் உடலை தூய்மைப்படுத்திக்கொண்டு வாருங்கள். ஏனென்றால் நாங்கள் அளிக்கக்கூடிய இந்த ஞானப்பால் நல்லதாக இருக்கின்றது, இந்தப் பாலை தூய்மையற்ற பாத்திரத்தில் ஊற்றினால் பால் கெட்டுவிடுமல்லவா? கொடுக்கக்கூடிய ஞானப் பாலில் குறையில்லையே. வாங்கிக்கொள்ளக்கூடிய தன்மைகளில்***

**அல்லவா நீங்கள் குறைவுபட்டுள்ளீர்கள்"** என்று நம்மைப்பார்த்து அங்கலாய்த்துக் கொள்கிறார். உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி குருஜிக்கு முன்பிருந்த பல சித்தர்களும் விரிவாகக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். நந்திதேவரின் சிஷ்யரான திருமூலர்(7) என்ற சுந்தரநாதரும் இவ்வாறு பாடிச் சென்றுள்ளார்.

**"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்;**
**உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே."**

திருமூலரின் திருமந்திரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள T. R. துளசிராம் அவர்கள், இந்த மந்திரத்தை இங்ஙனம் தம்முடைய எளிய நடையில் தந்துள்ளார்கள்.

**"Time was when I despised the body;**
**But then I saw the God within,**
**The body, I realized, is the Lord's temple;**
**And so I began preserving it with care infinite."**

குருஜியின் சொற்பொழிவிலிருந்து அவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல என்பதைப் புரிந்துகொள்கிறேன். இருப்பினும் பல சந்தேகங்கள் என் மனத்தில் எழுந்து, "இவர் எப்படிப்பட்டவர், ஏன் இப்படி உண்ணாவிரதம் இருக்க வேண்டும்? அதனால் அவருக்கு என்ன இலாபம்?" போன்ற கேள்விகளை கிளப்பி விடுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இயேசு கிறிஸ்து(8) தன்னை தேவ குமாரனென்றும், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்றும் "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்" என்றும் கூறிச் சென்றுள்ளார். இந்த குருஜியும், இறைவனுடைய குணாதிசயங்களோடு தன்னை இணைத்துப் பேசுகின்றாரே, அது எப்படி சாத்தியமாகிறது? "JESUS WAS SUFFERING UNDER THE ILLUSION THAT HE WAS THE SON OF GOD" என்று குறை கூறிய ஐரிஷ் நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னெர்ட் ஷா(9) (GEORGE BERNARD SHAW) இன்று உயிரோடு இருந்து, குருஜியின் பேச்சுக்களையும், தத்துவங்களையும், போதனைகளையும் ஆராய்வதாக இருந்தால், குருஜியைப் பற்றியும் இப்படிப்பட்ட கருத்தைத்தான் அவர் தெரிவித்திருப்பாரோ என ஒரு கணம் எண்ணினேன். ஆனால் மறுநிமிடமே வேறொரு எண்ணம் உதித்தது. "பெர்னெர்ட் ஷாவின் மனக்கண்கள் வழியாக நான் ஏன் இயேசு கிறிஸ்துவையும் குருஜியையும் பார்க்க வேண்டும்? எனக்கும் மனக்கண்கள் இருக்கின்றனவே. என்னுடைய சொந்த மனக்கண்களாலேயே நான் அவர்களைக் காணவேண்டும், என் சுய

உணர்வுகளாலேயே அவர்களுடைய அரவணைக்கும் அன்பின் அலைகளை உணர வேண்டும்" என முடிவு செய்கிறேன். இயேசு கிறிஸ்துவை என் மனக்கண் முன் நிறுத்துகிறேன். அவர் வாழ்ந்து காட்டிய முன்னுதாரணமான வாழ்க்கையிலிருந்து அவருடைய பரந்த உள்ளத்தையும் ஆழமான அன்பையும் உணர முயலுகிறேன். ஒரு சமயம், விபச்சாரத்திலே கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை இயேசுவின் முன் நிறுத்தி, "இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப் பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்?" என மதபோதகர்கள் அவரிடம் கேட்டபொழுது, "உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று அவர் கூறிய பதிலில் இருந்து அந்த உத்தம புருஷனின் தெய்வாம்சத்தை அறிந்து கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் போன்றே இந்த குருஜியின் வாழ்க்கையும் நான் பின்பற்றக்கூடிய ஒரு முன்னுதாரணமான வாழ்க்கையாக இருக்குமோ?

குருஜி எப்படிப்பட்டவர் என்ற கேள்வி மீண்டும் எழுகின்றது. அவரை அரை மணி நேரமே வீடியோவில் பார்த்துவிட்டு, அவர் இப்படிப்பட்டவர், இன்னின்ன குணாதிசயங்களை உடையவர் என்று என்னால் கூற இயலவில்லை. இருப்பினும் அவருடைய அன்பின் வார்த்தைகள் என்னை அவரண்டை ஈர்க்கின்றன. அவர் அணிந்திருக்கும் வெண்மையான ஆடைகள் அவருடைய வெள்ளை மனத்தை பிரதிபலிப்பதைப் போன்று தோன்றுகின்றன. குருஜியோடு நெருங்கிப் பழகவேண்டும் என்ற வாஞ்சை ஏற்படுகிறது.

இயேசு கிறிஸ்துவைப் போன்றே, குருஜியும் தன்னுடைய தெய்வத் தன்மையைப் பற்றி உறுதியாகப் பேசுகிறார். "மக்களிடத்தில் இருப்பதும் நான்; இந்தப் பிரபஞ்சத்தில் அனைத்துப் பொருட்களிலும் இருந்துகொண்டு இருக்கின்றேன் நான். இதை ஏன் மக்கள் உணரவில்லை?" என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார். சிறு வயதிலிருந்தே அவர் வேறுபட்ட தன்மையும் குணாதிசயங்களும் உடையவராக இருந்திருக்கிறார் என்பது அவருடைய பேச்சிலிருந்து புலப்படுகிறது. கோயில்களிலுள்ள சிலைகளைப் பார்க்கும் போதெல்லாம் அவற்றை வணங்குவதற்குப் பதிலாக அந்தக் கடவுளாகவே தான் மாற வேண்டும் என்ற எண்ணம் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் வேர் விட்டிருந்திருக்கிறது. மேலும், தனது ஏழாவது வயதில் ஏற்பட்ட வினோத அனுபவத்தை குருஜி இப்படி விவரிக்கின்றார்: "இனம்புரியாத ஏழாவது வயதில் என் இல்லத்தில் ஒரு நாள் கட்டிலில் படுத்துக்கொண்டு இருந்தபோது, இந்த உடலில் இருந்து ஏதோ ஒன்று பிரிந்து மேலே நின்று கொண்டு இருந்தது. எனக்கோ பயம்; கீழிருப்பது நானா, அல்லது மேலிருப்பது நானா என்ற குழப்பம்." இதைக்கேட்கும் பொழுது நமக்கும் சற்று குழப்பம் ஏற்படக் கூடுமெனினும், இவையனைத்தும் அவதார புருஷர்களின்

இலட்சணங்கள் என்பதை புரிந்துகொள்ளும்போது மனம் தெளிவடைகிறது.

உயர் நிலையிலுள்ள இறைவன் கீழ் நிலையிலுள்ள மனிதர்களை இரட்சிப்பதற்காகவும் அவர்கள் மத்தியில் நன்னெறிகளைப் பரப்புவதற்காகவும் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு நாடுகளில் மனிதனாகப் பிறக்கின்றான். இங்ஙனம் பிறந்த மனிதனை அவதாரப் புருஷன் என்றழைக்கின்றோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் நம் மத்தியில், உயர் ஞானத்தையும் நன்நெறிகளையும் பரப்பிவரும் இந்த குருஜியும் ஓர் அவதாரப் புருஷரே. இவர் மேற் கொண்ட இந்த 21-நாள் தவவேள்வியை நாம் எடுத்துக் கொள்வோம். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் இவ்வேள்வியை ஓர் அவதாரப் புருஷனே செய்யக்கூடும். உண்ணாமல், பேசாமல், யாரையும் காணாது மூன்றுவார காலம் தனி அறையில் இருந்து தவம் செய்வதற்கு சாதாரண மனிதனொருவனால் முடியாது. அவருடைய சொற்பொழிவிலிருந்து, கீழ்க்காணும் நோக்கங்களுக்காக அவர் இந்தத் தவ வேள்வியை மேற்கொண்டார் என்பதை தெரிந்து கொள்கிறோம்.

**(1) ஞானமும் அரசியலும் விரைவில் ஒன்றுபடுவதற்காக;**

**(2) "உங்களை நம்புங்கள்" என்ற தத்துவத்தை மக்களின் மனத்தில் வேரூன்றச் செய்வதற்காக.**

**(3) ஆசைகள் பூர்த்தியடையாது இறந்தவர்களின் ஆத்மாக்களுக்காக;**

**(4) இனி பிறக்கக்கூடியவர்களின் ஆன்மாக்கள் நல் ஆன்மாக்களாக இருக்க வேண்டும் என்பதற்காக;**

**(5) உலக மக்களின் உள்ளங்களெல்லாம் குளிர வேண்டும் என்பதற்காக;**

**(6) "நான்" என்ற தத்துவத்தை அறிந்ததனால் ஏற்பட்ட ஆனந்தத்தை மக்களோடு பகிர்ந்து கொள்வதற்காக;**

**(7) காய சுத்தி செய்வதற்காக;**

**(8) உலகத்தில் பெரிய மாற்றத்தையும் சத்திய யுகத்தையும் ஏற்படுத்துவதற்காக;**

**(9) பிரபஞ்சத்தை இயக்கக்கூடிய உறுபொருளின் தன்மையை உணர்த்துவதற்காக;**

**(10) மனிதன் மனத்தூய்மை பெற்று சந்தோஷம் அடைவதற்காக;**

**(11) தனி மனித சமாதானத்தின் மூலம் உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக;**

(12) அறிவையும் ஆற்றலையும் ஒன்றுபடுத்தி கடமைகளை எங்ஙனம் செவ்வனே செய்ய வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக;

(13) இறை உணர்வின் மூலம் மக்களை ஒன்றிணைப்பதற்காக;

(14) குருவின் கடமையைச் செய்வதற்காக.

தன்னைப் போலவே எல்லோரையும் ஆன்மீகத்துறையில் உயர்த்துவதுதான் ஒரு குருவின் கடமை என்று குறிப்பிடும் குருஜி, மேலும் இப்படிக் கூறுகிறார் : "என் கைகளைப் பற்றிக் கொண்டு நீங்களும் மேல் நோக்கி வாருங்கள். எனது இரு கரங்களும் எப்பொழுதும் உங்களை உயர்த்துவதற்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கும்." மிகவும் அருமையான, ஆறுதல் அளிக்கும் வார்த்தைகள்; உன்னத தத்துவத்தை சுட்டிக்காட்டும் வார்த்தைகள் இவைகள்.

ஒரு வேளை நாம் சிறிது சந்தேகத்தோடும் அறியாமையோடும் இப்படிக் கேட்கலாம் : "குருஜிதான் 21 நாட்கள் ஒன்றும் சாப்பிடவில்லையே, அவர் மெலிந்து, பலவீனமாக அல்லவா காணப்பட வேண்டும். ஆனால் அவரைப் பார்த்தால் ஒரு மாற்றமும் தெரியவில்லையே". குருஜியே இதைப்பற்றி என்ன சொல்கிறார் எனக் கேட்போம். "மூன்று நாட்கள் இந்த உடலுக்கு உணவில்லையெனில் எடை குறையும் என்கிறது மருத்துவ விஞ்ஞானம். ஆனால் 16-12-1991 அன்று எந்த எடையோடு உள்ளே சென்றேனோ அதே எடையோடு வெளியே வந்து இருக்கின்றேன். உள்ளே செல்லும் போது 60 கிலோ எடை. வெளியே வரும்போது 60 கிலோதான்."

உணவின்றி 21 நாட்கள் உயிர் வாழ முடியும் என்பதை குருஜி இந்த தவவேள்வியின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். அவசியம் ஏற்படின் உணவின்றியே அவரால் ஆயுள் காலம் வரை ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடியும். உணவின்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் உயிர்வாழ்ந்த கிரிபாலா என்னும் வங்காள யோகினியைப் பற்றிய விபரங்களை, பரமஹம்ஸ யோகானந்தர் எழுதிய, "AUTOBIOGRAPHY OF A YOGI" என்ற நூலில் காணமுடிகிறது. 1936-ஆம் ஆண்டு யோகினி கிரி பாலாவை ரிச்சர்ட் ரைட் என்ற அமெரிக்கரும் பரமஹம்ஸ யோகானந்தரும் சந்தித்த பொழுது, அந்த அம்மையார் தன்னைப் பற்றி இப்படிக் கூறிக்கொண்டார்கள்.

"I have never had any children; many years ago I became a widow. I sleep very little, as sleep and waking are the same to me. I meditate at night, attending to my domestic duties in the day time. I slightly feel the change in climate from season to season. I have never been sick or experienced any disease. I feel only slight pain when accidentally injured. I have no bodily

excretions. I can control my heartbeat and breathing. In visions I often see my guru and other great souls. I was strictly commanded by my guru not to divulge the secret (of living without food.) It is not his wish to tamper with God's drama of creation. It appears that misery, starvation and disease are whips of our karma that ultimately drive us to seek the true meaning of life."

யோகினி கிரி பாலாவைப் போன்றவர்கள் ஐரோப்பிய நாடுகளிலும் இருந்திருக்கின்றனர். தெரேஸ் நியுமன் என்ற ஜெர்மானியப் பெண்மணியும், தினந்தோறும் ஒரு துண்டு பரிசுத்த அப்பத்தை உண்டு பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தார். இவர்களால் இதை எப்படி சாதிக்க முடிந்தது என்பதற்கு "AUTOBIOGRAPHY OF A YOGI"யிலேயே சில குறிப்புகள் காணப்படுகின்றன.

"The non-eating state attained by Giri Bala is a yogic power mentioned in Patanjali's Yoga Sutra III : 31. She employs a certain breathing exercise that affects the Visuddha Chakra, the fifth center of subtle energies located in the spine. The Visuddha Chakra, opposite the throat, controls the fifth element, akash or ether, pervasive in the intra-atomic spaces of the physical cells. Concentration on this chakra enables the devotee to live by etheric energy."

"Therese Neumann neither lives by gross food nor practices a scientific yogic technique for non-eating. The explanation is hidden in the complexities of personal karma."

"Man's body battery is not sustained by gross food alone, but by the vibratory cosmic energy. The invisible power flows into the human body through the gate of the medulla oblongata."

இவற்றில் இருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், சாதாரண கண்களுக்குப் புலப்படாத பிராண சக்தியை எந்த ஒரு மனிதன் அடக்கி வசப்படுத்தி வைத்திருக்கின்றானோ, அந்த மனிதனால் உணவின்றி உயிர் வாழ முடியும்; ஏனென்றால் உடலை இயக்குவதற்குத் தேவைப்படும் இந்தப் பிராண சக்தியை, ஹிரண்யகர்ப்பமாய் விளங்கும் சூரியனில் இருந்து பெற்றுக்கொள்ளும் உபாயத்தை அவன் அறிந்து வைத்திருக்கின்றான். இந்த குருஜியும் பிராணனை அடக்கி ஆளக்கூடிய யோகியாக இருப்பதால்தான் அவரால் உணவின்றி மூன்று வார காலம் தவ வேள்வி இயற்ற முடிந்தது. அதனால்தான் இந்த ஒளிநாடாவின் துவக்கப் பகுதியில், "அதிதியின் மைந்தா சரணம் சரணம்; அன்பனே சரணம் சரணம்; ஆதித்யனே சரணம் சரணம்" என்ற பாடலை இணைத்திருந்தார்கள் போலும்.

ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்திலுள்ள இந்த வரிகள், எட்டுத் திக்கிலும் சஞ்சரிக்கும் சுந்தரத் தன்மையுடைய குருஜிக்கு பொருத்தமான வரிகளே.

குருஜியின் நீண்ட சொற்பொழிவும் முடியப் போகிறது. கடைசியாக அவர் என்ன கூறுகின்றார் என்று கேட்போம். "இன்றிலிருந்து உலகம் முழுவதும் இந்த ஞானமணி ஒலித்து, உலக அரசியல்வாதிகளெல்லாம் இந்த ஞானத்தின் வழி திருப்பப்படுவர். இந்த உலகத்தில் சமாதானத்தையும், சமத்துவத்தையும், சத்திய யுகத் தையும் தோற்றுவித்த பிறகு, அதைக் கண்டு ஆனந்தித்த பிறகு இந்த உடல் சமாதி நிலை பெறும்". கி.பி. 2000க்குள் சத்திய யுகத்தை அமைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு மக்கள் மத்தியில் நன்நெறிகளை பரப்பி வரும் இந்த குருஜியின் முகத்தை மீண்டும் கூர்ந்து கவனிக்கின்றேன். கள்ளங் கபடமற்ற இந்த முகத்தில் ஒரு புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டேயிருக்கிறது. "ஐயனே, நீர் நீட்டிய நேசக் கரங்களைப் பற்றிக்கொண்டு ஆன்மீகத்துறையில் மேல்நோக்கி வர நானும் ஆசைப்படுகின்றேனே. எனக்கும் ஒரு வழியை நீர் காட்டமாட்டீரா...?" என்ற ஓர் ஏக்கத்தோடு ஒளிநாடாவை வீடியோ கேஸட் ரெக்கார்டரிலிருந்து வெளியே எடுக்கின்றேன்.

மறுநாள் காலை (10-2-1992, திங்கட்கிழமை) அந்த ஒளிநாடாவோடு ஒரு சிறு குறிப்பை எழுதி வைத்துவிட்டு அலுவலகத்திற்குச் சென்று விட்டேன். "ராணிம்மா, இந்த டேப்பை பார்த்த பிறகு திரு. துரைசாமியிடம் திருப்பிக் கொடுத்துவிடு" என்று எழுதப்பட்டிருந்த குறிப்பை, காலையில் ஏழரை மணிக்கு வேலையில் இருந்து வீடு திரும்பிய என்னுடைய மனைவி வாசித்துவிட்டு, அன்று பிற்பகல் அந்த ஒளிநாடாவை போட்டுப் பார்த்திருக்கிறார். மாலை ஆறு மணிக்கு வீடு திரும்பிய பிறகு இதைப்பற்றிக் கேட்டேன். "உங்கள் குருஜியைப் பார்த்தால் யேசுவானவரைப்போல் தெரிகிறார்" என்று பேச்சை ஆரம்பித்தார். "மற்றவர்கள் பேசியதை நான் சரியாக கவனிக்கவில்லை; குருஜி பேசியதைத்தான் நன்றாகக் கேட்டேன். பரமஹம்ஸ யோகானந்தர் சொன்னதைத்தான் இவரும் சொல்கிறார். அவர் இங்கிலீஷில் சொன்னார்... இவர் அதையே தமிழிலே சொல்கிறார். அவ்வளவுதான் வித்தியாசம்" என்றார்.

அடுத்த நான்கு நாட்களுக்கு நான் வீட்டில் இல்லை. எங்களுடைய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக கோலாலம்பூர் சென்றிருந்தேன். 14-2-1992 வெள்ளிக்கிழமை இரவு நான் வீடு திரும்பிய பிறகும் குருஜியைப் பற்றி நாங்கள் ஒன்றும் பேசிக்கொள்ள வில்லை. மறுநாள் (சனிக்கிழமை) வழக்கம்போல் வேலைக்குச் சென்றேன். பிற்பகல் 21/2 மணிக்கு வீடு திரும்பியவுடன் சாப்பிட்டுவிட்டு செய்தித்தாள்களை வாசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் மனைவி பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார். "நீங்கள் வேண்டுமானால் கொஞ்சம் ரெஸ்ட்

எடுத்துக் கொள்ளுங்கள். சாயந்திரம் நாலரை மணிக்குப் போல் கோலாலம்பூருக்குப் புறப்பட்டு போய் குருஜியைப் பார்த்துவிட்டு வரலாம்" என்றார். எனக்கோ சற்று கோபம்; தலைவலி வேறு. ஒன்றும் பேசாமல் மேல்மாடிக்குச் சென்று, "THE THEOSOPHIST"ஐ வாசித்துக் கொண்டே தூங்கி விட்டேன்.

மாலை 6.00 மணிக்கு மீண்டும் குருஜியைப் பற்றி பேச ஆரம்பித்தோம். மறுநாள் காலை கோலாலம்பூருக்குச் சென்று குருஜியைப் பார்த்துப் பேச வேண்டும் என கடைசியில் தீர்மானித்தோம். திரு. துரைசாமி அவர்களிடமிருந்து குருஜியின் தொலைபேசி எண்ணைப் பெற்றுக் கொண்டோம். அன்றிரவே 03-2558833 என்ற எண்ணைச் சுழற்றினோம். வேறொருவர் போனை எடுத்துப் பேசினார். தன்னுடைய பெயர் துரைராஜா என்றும், குருஜியின் உதவியாளர் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அவரிடம் எங்களுடைய நோக்கத்தைக் கூறினோம். "குருஜியை நீங்கள் காலையிலேயே பார்க்கிறதுதாங்க நல்லது. ஒன்பது மணிக்கு மேலே அவர் ரொம்ப பிஸியா இருப்பார்" என்று திரு. துரைராஜா அவர்கள் ஆலோசனை கூறினார்கள். அதன் பிரகாரமே, 16-2-1992 ஞாயிற்றுக் கிழமை காலை 7.30க்கு குருஜியை சந்திப்பதென்று உறுதி செய்து கொண்டோம்.

"நாளைக்குக் காலையிலே எப்போது புறப்படுகிறோம்?" என்று என் மனைவி கேட்டார். "விடியற்காலையில் நாலு மணிக்குப் புறப்பட்டால்தான் அங்கே ஏழரை மணிக்கு இருக்க முடியும். அந்த வீட்டுக்குப் போகிற வழியும் எனக்குச் சரியாகத் தெரியாது" என்றேன்.

அன்றிரவு நாங்கள் இருவருமே நன்றாகத் தூங்கவில்லை. பல எதிர்பார்ப்புகளைச் சுமந்து கொண்டு எங்கள் எண்ண அலைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருந்தன.

# அத்தியாயம் 4
# "சிரிக்குதே ஒரு வெள்ளை ரோஜா"

திட்டமிட்டபடியே 16-2-1992 ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணிக்கு நாங்கள் கோலாலம்பூருக்குப் பயணமானோம். குருஜியிடம் காணிக்கையாக சமர்ப்பிப்பதற்கென ஒரு தட்டு நிறைய ஆப்பிள், ஆரஞ்சு, வாழைப்பழம், கல்கண்டு ஆகியவற்றை எடுத்துச் சென்றோம். உறங்கிக் கொண்டிருந்த எங்களுடைய மகள் அய்வின் மாலினியை எழுப்ப நாங்கள் விரும்பாததால் அவளை வீட்டிலேயே விட்டு விட்டு, ஒரு சிறு குறிப்பை மட்டும் எழுதி ரேடியோ அருகில் வைத்து விட்டுப் புறப்பட்டோம்.

வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு, மேல் மாடிக்குச் சென்று என்னுடைய அறையில் மாட்டியிருக்கும் பரமஹம்ஸ யோகானந்தருடைய படத்திற்கு முன்னால் நின்று கொண்டு அவரையே சற்று நேரம் உற்று நோக்குகிறேன். ஒரு குற்ற உணர்வு என் உள்ளத்தை வாட்டுகிறது. "ஐயா, நான் உமக்குத் துரோகம் செய்து விடுவேனோ என பயப்படுகிறேன். கடந்த இரண்டரை ஆண்டுகளாக உம்முடைய போதனையில் திளைத்த நான் இன்று வேறொரு குருவைத் தேடி சென்று கொண்டிருக்கிறேன். இந்த மாற்றத்தை எப்படி விவரிப்பது என்று எனக்குத் தெரியவில்லையே. உம்முடைய போதனைகளுக்கும் இந்த குருஜியின் போதனைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக அல்லவா எனக்குத் தோன்றுகிறது. ஒரு வேளை இந்த குருஜியாக நீர் அவதாரம் எடுத்திருக்கிறீரோ?" என கேட்டுக் கொண்டே என்னுடைய மனத்தை சமாதானப் படுத்திக் கொள்கிறேன்.

"நேரமாகிறது, சீக்கிரம் புறப்படுங்கள்" என்று என் மனைவி என்னை துரிதப்படுத்துகிறார். அந்த அவசரத்தில் காமராவை (Camera) அலமாரிலேயே விட்டு விட்டு காரில் ஏறுகிறேன். சீஸர், ஃபாரோ (CAESAR, PHARAOH) என்னும் எங்களுடைய இரண்டு பெரிய நாய்களும் வாலையாட்டிக்கொண்டு இரும்புக் கதவண்டை வந்து நிற்கின்றன.

கோலாலம்பூர் என்னும் பட்டணம்தான் எங்கள் நாட்டின் தலைநகரம். அது எங்கள் ஊரிலிருந்து சுமார் 150 கீலோ மீட்டர்

தொலைவில் இருக்கிறது. உயர்ந்த கட்டிடங்கள் நிறைந்த பெரிய பட்டணம். அங்குள்ள கார் நெரிசலை நான் எப்பொழுதுமே விரும்பியதில்லை. போகுமிடத்திற்கு வழி சரியாகத் தெரியாவிட்டால் என்னைப்போன்ற ஓட்டுநர்கள் அதிக அவதிப்பட வேண்டியதுதான். குருஜி தங்கியிருந்த பகுதிக்கு நான் இதுவரை சென்றிராததால் அவர்களுடைய முகவரியை மீண்டும் ஒரு முறை என்னுடைய டயரியில் சரி பார்த்துக் கொள்கிறேன். "GURUJI, C/O MR. S. SUPRAMANIAM, NO. 9, LORONG JELUTONG KANAN, 50490 KUALA LUMPUR. PHONE NO. 03-2558833." மலேசியப் பிரதமர் Dr. மஹாதிர் முகமட் அவர்களின் வீட்டைக் கடந்துதான் திரு. சுப்ரமணியம் அவர்களின் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பதை கோலாலம்பூர் நகர வரை படத்திலிருந்து தெரிந்து கொள்கிறேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் கோலாலம்பூரில் அதிக கார் நெரிசல் இல்லாதிருந்தது. எனவே எவ்விதச்சிரமமுமின்றி குருஜியின் இருப்பிடத்திற்கு காலை 7.15 மணிக்கே வந்து விட்டோம். சந்திப்பு நேரம் 7.30க்கு என்பதால், காரிலேயே கொஞ்ச நேரம் காத்திருந்தோம். காரில் உட்கார்ந்திருந்தவாறே அந்தத் தெருவிலுள்ள வீடுகளைக் கவனித்தோம். எல்லா வீடுகளும் பெரிய வீடுகளாக இருந்தன. திரு. சுப்ரமணியம் அவர்களின் வீட்டைச் சுற்றியுள்ள சுவர்களில் அசோக சக்கரம் போன்ற சக்கரங்கள் பதிக்கப்பட்டிருந்தன.

"குருஜியை நான் எப்படி அழைப்பது?" எனக் கேட்கிறார் என் மனைவி. "குருஜி என்று கூப்பிட்டாலே போதும்" எனக் கூறுகிறேன் நான். முகத்தை கண்ணாடியில் சரி பார்த்துக் கொள்கிறோம். குருஜி தங்கியிருக்கும் வீட்டில் ஆள்நடமாட்டம் தெரிகிறது. அழைப்பு மணியின் விசையை அழுத்துகிறோம். சிறிது நேரத்தில் இரும்புக் கதவு திறக்கப்படுகிறது. தன்னை துரைராஜா என்று அறிமுகப்படுத்திக் கொண்ட ஒரு பெரியவர் எங்களை அந்த வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறார். ஹாலில் போடப்பட்டிருக்கும் வசதியான ஸோபாவில் அமர்ந்தவாறே எங்களை அறிமுகப்படுத்திக் கொள்கிறோம். எங்களுடைய வரவை குருஜியிடம் தெரிவித்துவிட்டு எங்களுக்கு காப்பி கொண்டு வருகிறார் திரு. துரைராஜா அவர்கள். அந்த வீட்டின் சொந்தக்காரரான திரு. சுப்ரமணியம் அவர்களும் மேல் மாடியிலிருந்து கீழிறங்கி வந்து எங்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்கிறார்.

சரியாக காலை மணி 7.40க்கு, சிரித்த முகத்துடன் குருஜி தங்கியிருக்கும் அறையினுள் நுழைகிறேன். "வணக்கம் குருஜி, என்னுடைய பெயர் ஜோஸஃப். தாப்பாவிலிருந்து வந்திருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே பழத்தட்டை அந்த அறையிலுள்ள சிறிய

மேஜையின் மீது வைக்கிறேன். அதன் பிறகு, கைகளை கூப்பியவாறு சிரம்தாழ்த்தி குருஜியை வணங்குகிறேன். குருஜியும் புன்முறுவல் பூத்தவாறே, "வாருங்கள், ரொம்ப சந்தோஷம். அவர்களையும் உள்ளே வரச் சொல்லுங்கள்" என அன்புடன் கூறுகிறார்கள். "ராணிம்மா, குருஜி உன்னையும் உள்ளே வரச் சொல்லுகிறார்கள்" என நான் கூறியதைக் கேட்டு சற்று தயக்கத்துடனேயே குருஜியின் அறையினுள் நுழைகிறார் என் மனைவி புஷ்பராணி. ஆனால் குருஜியைப் பார்த்த மாத்திரத்தில் அவருடைய முகத்தில் மகிழ்ச்சி தாண்டவ மாடுகிறது. குருஜியின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறார்.

"எப்படிம்மா, பயணம் நல்லா இருந்ததா?" என குருஜி கேட்கிறார்கள். "ஆம் குருஜி, இன்றைக்கு ஒரு பிரச்சனையுமில்லாமல் இங்கே வந்து விட்டோம். கோலாலம்பூருக்கு வரும் போதெல்லாம் இவர்கள் வழிதவறி கஷ்டப்படுவார்கள். ஆனால் இன்றைக்கோ எவ்வித சிரமமுமின்றி நேராக இங்கே வந்து விட்டோம்" என்கிறார் என் மனைவி.

கட்டிலில் அமர்ந்து கொண்டு தன்னுடைய அன்பான குரலில் குருஜி எங்களிடம் பேச ஆரம்பிக்கிறார்கள். தரையில் விரிக்கப்பட்டுள்ள கம்பளத்தில் அமர்ந்தவாறே நாங்களிருவரும் குருஜி பேசுவதை ஆவலோடு கேட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய மனத்தில் விவரிக்க முடியாத அமைதியும் சந்தோஷமும் குடிகொண்டிருப்பதை உணர்ந்த நிலையில் குருஜி மகான் அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டு எங்களுடைய சந்தேகங்களைப் போக்கிக் கொள்கிறோம்.

**நான் :** "குருஜி, நீங்கள் போதிக்கும் தத்துவத்தின் சாராம்சம் என்ன?"

**குருஜி :** "மனிதர்களாகிய நாம் ஆற்றல் மிக்கவர்கள். ஆனால் நம்மில் பலருக்கு இந்த ஆற்றலைப் பற்றி அதிகம் தெரியாது. ஆற்றலை எப்படி வளர்த்துக் கொள்வது என்பதைப் பற்றி வெகுசிலரே அறிந்து வைத்திருக்கின்றனர்."

"உலகிலுள்ள லட்சக்கணக்கான ஜீவ ராசிகளுள் மனிதன் மாத்திரமே ஓர் உயர்ந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் அவனுக்கு ஆறாவது அறிவு என்னும் பகுத்தறிவு கொடுக்கப்பட்டிருக்கிறது. தன்னை மென்மேலும் உயர்த்திக் கொள்ள விரும்பும் மனிதன் தன்னுடைய பகுத்தறிவை நன்றாகப் பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். கூர்மதியையுடைய ஒருவன் ஏகாக்கிர சிந்தனையோடு தத்துவ விசாரணையில் ஈடுபடும் பொழுது, சில உண்மைகள் அவனுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன."

"உதாரணத்திற்கு, ஒரு கற்சிலையை எடுத்துக்கொள்ளுங்கள். பாறையைப் பிளந்து, நல்ல கருங்கல்லைத் தேர்ந்தெடுத்து, திறமை மிகுந்த சிற்பி ஒரு தெய்வ உருவத்தை உண்டாக்குகிறான். ஆனால் இந்தச் சிலையை கோயிலில் வைத்து உடனே வழிபடமாட்டார்கள். வேறொரு சிற்பியின் துணை கொண்டு இந்தச் சிலைக்கு கண்திறப்பு விழா செய்யப் படுகிறது. அதன்பிறகு, யந்திரம் என அழைக்கப்படும் தகடுகளை சிலைக்கடியில் வைத்து மந்திரங்களை ஓதி அந்த சிலைக்குச் சக்தியைக் கொடுக்கிறார்கள். நன்றாக யோசித்துப் பாருங்கள். மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட, உயிரற்ற ஒரு கற்சிலைக்கு மனிதனால் இவ்வளவு சக்தியைக் கொடுக்க முடியுமென்றால், இறைவனின் அம்சமாக விளங்கும் இந்த மனிதனின் நெற்றிக்கண் திறக்கப்பட்டுவிட்டால் அவன் எவ்வளவு பெரிய ஆற்றல் படைத்தவனாக இருப்பான் என்பதைப்பற்றி சிந்தித்துப் பார்த்தீர்களா?"

**நான் :** "குருஜி, நீங்கள் குறிப்பிட்டுள்ள இந்த நெற்றிக்கண்ணுக்கும் குண்டலினி யோகத்திற்கும் என்ன சம்பந்தம்?" (என் மனத்திற்குள் இப்படி எண்ணிக்கொள்கிறேன் : குருஜி கூறிய இந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல தத்துவம்தான். அதனால்தான் சிவ வாக்கியரும் இப்படிப் பாடிச் சென்றார் போலும்.

***'நட்ட கல்லை தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்தியே,***
***சுற்றி வந்து முணுமுணென்று சொல்லுமந்திரமேதடா!***
***நட்ட கல்லும் பேசுமோ, நாதனுள்ளிருக்கையில்?***
***சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?')***

**குருஜி :** " வெகு தொலைவிலுள்ள கோள்களைப் பார்க்க வேண்டுமென்றால் டெலஸ்கோப் என்னும் கருவியை உபயோகிக்கிறோம். தூரத்திலுள்ள மரக்கிளையில் அமர்ந்திருக்கும் ஓர் அழகிய குருவியை நன்றாகப் பார்க்க வேண்டுமென்றால் பைனாக்குலர் என்னும் தொலை நோக்காடியை உபயோகிக்கிறோம். மனிதனின் பார்க்கும் சக்தியை அதிகரிக்கச் செய்வதற்காகவே மனிதனால் உண்டாக்கப்பட்ட 'கண்கள்' இந்த தொலை நோக்கிக் கருவிகள். ஆனால் இறைவன் நமக்கு வேறொரு கண்ணைக் கொடுத்திருக்கிறான். இதைத்தான் நெற்றிக்கண் என்றும், ஞானக்கண் என்றும், மூன்றாவது கண் என்றும் அழைக்கிறோம். எவருடைய நெற்றிக்கண் திறக்கப்பட்டிருக்கிறதோ, அவரால் மாத்திரமே உள்ளே கடந்து கடந்து சென்று கடவுள் நிலையைக் காண முடியும். அதனால்தான் ஞான வள்ளல் பரஞ்சோதி மகான் அவர்களும்,

***'எட்டாத தற்பரத்தை எட்டி எட்டி***

***உட்புறமாய் உட்சென்று உற்று நோக்க நோக்க,***
***அப்பரமும் இப்பரமும் ஏக பராபரமும்***
***என்னுள் நான் அறிந்தேன்.'***

என்று கூறிச் சென்றுள்ளார்கள்."

"இறைவன் கொடுத்த இந்த நெற்றிக் கண்ணைத் திறப்பதற்கு இறையருள் பெற்ற ஒரு சத்குரு தேவைப் படுகிறார். இந்த நெற்றிக் கண்ணைத்தான் ஆக்ஞேய சக்கரமென்றும் குறிப்பிடுகிறோம். எப்படி சக்கரங்களின் துணைகொண்டு ஒரு வண்டி நன்றாக செயல் படுகின்றதோ அதைப் போன்றே நம்முடைய உடல் நன்றாக செயல் படுவதற்கு நம்முடைய முதுகந்தண்டிலும் தலையிலும் மொத்தம் ஆறு முக்கிய சக்கரங்கள் இருக்கின்றன. இவற்றைத்தான் முருகனின் ஆறுபடை வீடு என்றும் கூறுகின்றோம். முருகன், சிவபிரானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவர் என்று கூறப்படுவதால் நெற்றிக் கண்ணின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம். சக்கரங்கள் அனைத்திற்கும் ஆதாரமாக விளங்கும் சக்கரத்தை மூலாதார சக்கரம் என அழைக்கின்றோம். இது முதுகந்தண்டிற்குக் கீழே குதப் பகுதியை யொட்டி அமைந்திருக்கிறது. இந்த மூலாதாரத்தில் உறங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தியை தட்டி எழுப்பி அதை ஆக்ஞேய சக்கரத்திற்குக் கொண்டு வந்து, ஒரு மனிதனின் நெற்றிக் கண்ணை திறந்து விடுவதைத்தான், 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்று கூறுகிறோம்."

**நான் :** " 'தட்டுங்கள், திறக்கப்படும்' என்பது இயேசுவானவர் கூறிய வார்த்தைகளாயிற்றே, குருஜி."

**குருஜி :** "வாஸ்தவம்தான். உயர் ஞானத்தை எளிய நடையில் பாமர மக்களுக்குப் போதித்தவர்தான் இயேசுகிறிஸ்து. அவர் பல நாள்கள் உபவாசமிருந்து தனது ஆற்றல்களை வளர்த்துக் கொண்டவர். இறைவனோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த அந்த அவதாரப் புருஷர் எல்லாரிடத்திலும் ஆழ்ந்த அன்பு செலுத்தினார். அவருடைய போதனைகளை அறிந்து, உணர்ந்து பின்பற்றுகிறவர்கள் பாக்கியவான்கள்."

**நான் :** " நீங்கள் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டு நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன், குருஜி. என்னுடைய வாழ்க்கையில் நான் யாரையும் தலையில் தூக்கிவைத்து துதி பாடியது கிடையாது. ஆனால் புத்தர், இயேசு கிறிஸ்து, திருவள்ளுவர், வடலூர் வள்ளலார் போன்றவர்கள் மீது ஒரு தனிப்பற்று உண்டு. இவர்களுடைய உயர்ந்த தத்துவங்களைப் புரிந்து கொண்டு பின்பற்றவே முயற்சி செய்து வருகிறேன்."

**குருஜீ :** " எப்படி முயற்சி செய்து வருகிறீர்கள் ?"

**நான் :** " எந்த மதத்தின் மீதும் எனக்கு வெறுப்பு கிடையாது. எல்லா மதங்களிலும் காணப்படும் உயர்ந்த தத்துவங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவா சிறு வயது முதல் இருந்த படியால், பல்வேறு நூல்களையும் விரும்பி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன். ஆனால் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகத்தான் இறை தத்துவத்தைப் புரிந்து கொள்வதில் ஆழ்ந்த சிரத்தை காட்டி வருகிறேன். பரமஹம்ஸ யோகானந்தர் அவர்கள் எழுதிய, 'AUTOBIOGRAPHY OF A YOGI' என்னும் புஸ்தகத்தை சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வாசித்ததிலிருந்து, அவர் ஸ்தாபித்த SELF - REALIZATION FELLOWSHIP என்ற ஆன்மீக நிறுவனத்தில் என்னை ஓர் அங்கத்தினனாகப் பதிவு செய்து கொண்டேன். அவர்கள் அனுப்பி வைக்கும் ஆன்மீகப் பாடங்களைப் படித்து, என்னுடைய எண்ணங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள கற்றுக் கொண்டேன். 'ENERGIZATION EXERCISES' என அழைக்கப்படும் சில ஊக்கமூட்டும் உடற்பயிற்சிகளையும் சொல்லித்தருகிறார்கள். மூச்சுப் பயிற்சியும் இதில் அடங்கும். தியானமும் செய்து வருகிறேன். மன அமைதி கிடைக்கிறது. என்னுடைய மனைவியும் யோகானந்தருடைய புஸ்தகங்களை விரும்பிப் படிக்கிறார். தினந்தோறும் தவறாது தியானமும் செய்து வருகிறார்."

**குருஜீ :** "தினந்தோறும் தியானம் செய்கிறீர்களா? பேஷ், பேஷ்!"

**புஷ்பராணி :** "ஆமாம் குருஜி. முறைப்படி தியானம் செய்யத் தெரியாவிட்டாலும் எங்களுக்குத் தெரிந்தவரை ஒழுங்காக தியானம் செய்து வருகிறோம். கூடிய விரைவில், கலிபோர்னியாவிலுள்ள யோகானந்தரின் ஆஷ்ரமத்திற்குச் சென்று அங்கு சில வாரங்கள் தங்கியிருந்து பல விஷயங்களைத் தெரிந்துகொண்டு வர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன், குருஜி."

**குருஜீ :** "எதைக் கற்றுக்கொண்டு வரவேண்டும் என்று ஆசைப் படுகிறீர்கள்?"

**புஷ்பராணி :** "அந்த ஆஷ்ரமத்தை எப்படி நடத்துகிறார்கள், ஆஷ்ர மத்தில் தங்கியிருப்பவர்கள் அன்றாடம் என்னென்ன செய்கிறார்கள், எப்படி தியானம் பண்ணுகிறார்கள், ENERGIZATION EXERCISES செய்வது எப்படி என்பதையெல்லாம் கற்றுக்கொள்ளப்போகிறேன்."

**குருஜீ** : "இதற்காகவா அமெரிக்கா செல்ல வேண்டும் என்கிறீர்கள்?"

***புஷ்பராணி*** : "ஆமாம், குருஜி."

**குருஜீ** : "அம்மா, நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் அமெரிக்காவே இங்கே வந்திருக்கிறது."

***புஷ்பராணி*** : "புரியவில்லையே, குருஜி."

**குருஜீ** : "நீங்கள் இருவரும் எதைத் தேடிக் கொண்டிருந்தீர்களோ, அதைக் கண்டடையும் நேரம் வந்து விட்டது."

***நான்*** : "பரமஹம்ஸ யோகானந்தரை என்னுடைய குருவாக ஏற்றுக் கொண்டு கடந்த இரண்டாண்டுகள்ாக தியானம் செய்து வருகிறேன். அவர்களுடைய போதனைகளை அலசிப் பார்த்து, ஏற்றுக்கொண்டு பின்பற்றி வருகிறேன். ஆனால் உங்களைப் பற்றி எங்களுக்குத் தெரியாதே, குருஜி."

**குருஜீ** : "சரி, நீங்கள் இருவரும் எதற்காக என்னிடம் வந்திருக்கிறீர்கள்?"

***நான்*** : "குருஜி, நான் சத்தியத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன். ஆச்சாரங்களுக்கும், சடங்குகளுக்கும், மதங்களுக்கும் அப்பாற்பட்ட இறைதத்துவத்தைக் காட்டக்கூடிய ஒரு குருவை நான் தேடிக் கொண்டிருக்கிறேன். அந்தக் குருவாக நீங்கள் இருக்க முடியுமா என எனக்குத் தெரியவில்லையே."

**குருஜீ** : "நீங்கள் சத்தியத்தைத் தேடி எங்கும் போகவேண்டியதில்லை. நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் சத்தியம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அந்த சத்தியத்தைக் காட்டக் கூடிய சத்குருவாக நான் இங்கு வந்திருக்கிறேன். என்னிடம் தீட்சை பெற்றுக்கொண்டு ஒழுங்காக தியானம் செய்து வாருங்கள். நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் சத்தியத்தைக் கண்டடைவீர்கள்."

***புஷ்பராணி*** : "உங்களை அந்த வீடியோ படத்தில் பார்த்ததிலிருந்து உங்களை நேரில் சந்தித்து உங்களோடு அதிக நேரம் பேச வேண்டும் என்று ஆசையாக இருந்தது, குருஜி. "

***நான்*** : (என்னுடைய மனைவியைப் பார்த்து), "ராணிம்மா, குருஜியைப் பார்த்தால் இயேசுவானவரைப் போல்

தோற்றமளிக்கிறார்கள் என்பதைக் கவனித்தாயா?"

**புஷ்பராணி :** "குருஜி, எங்கள் வீட்டில் இருக்கும் இயேசுவானவருடைய படத்தைப் பார்த்து விட்டு உங்களை நேரில் பார்த்தால், நீங்கள் இருவரும் அண்ணன் தம்பி என்றுதான் எல்லாரும் சொல்லுவார்கள்."

**நான் :** "ஒருவரின் கைரேகைகள் வேறொருவரின் கைரேகைகளைப் போல் இருக்காது என்று கைரேகை நிபுணர்கள் சொல்லுகிறார்கள்... ஆனால் சில வேளைகளில் ஒரே தோற்றமுள்ள இரண்டு நபர்களை நாம் வெவ்வேறு இடங்களில் சந்திக்கிறோம். அவர்கள் இருவருக்குமிடையே எவ்வித இரத்தத் தொடர்பும் இல்லாமலும் இருக்கலாம். உங்களுடைய தோற்றம் இயேசுவானவரைப் போல் இருக்கிறதே, அதற்கு ஏதாவது விளக்கம் கொடுக்கமுடியுமா, குருஜி?"

**குருஜி :** "ஒன்றைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது அதுவாகவே மாறிவிடுகிறோம். இறைவனைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து மனமுருகும் மனிதனிடத்தில் இறைவனின் அன்பைக் காணமுடிகிறது. அத்தகைய மனிதனின் கண்களில் கருணையைக் காணலாம். ஆகையால் அவனுடைய முகம் எப்பொழுதும் சாந்தமாகத் தோன்றுகிறது. நான் தெய்வீகத்தில் வேள்வியில் இருந்த சமயம் இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பற்றி ஆழமாக சிந்தித்து மனதுருகினேன். அந்த உத்தம புருஷனை மக்கள் நிந்தித்து அடித்து, கொலை செய்கின்ற சமயத்திலும் அவர் என்ன சொன்னார்? 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாது இருக்கிறார்களே' என்றல்லவா அவர் இறைவனிடம் மன்றாடினார். ஒருவேளை அதனால்தான் என்னுடைய முகச்சாயல் இயேசு நாதரின் முகச் சாயலை ஒத்திருக்கிறது போலும்."

**புஷ்பராணி :** "சற்று நேரத்திற்கு முன்பு தீட்சையைப் பற்றி குறிப்பிட்டீர்கள். தீட்சை என்றால் என்ன? பெண்களும் அதைப் பெற்றுக்கொள்ள முடியுமா? அதனால் எங்களுக்கு ஏதாவது பிரச்சனை ஏற்படுமா? கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்கள், குருஜி."

**நான் :** "தீட்சையைப் பெற்றுக்கொண்ட பிறகு, நான் ஒருவேளை வீட்டை விட்டு ஓடிப்போய் இமயமலை அடிவாரத்தில் நிஷ்டையில் அமர்ந்து விடுவேனோ என்று என் மனைவி பயப்படுகிறாள், குருஜி."

**குருஜி :** "அப்படியா, அம்மா."

**புஷ்பராணி :** "அப்படியொன்றுமில்லை, குருஜி."

**குருஜி :** "பிரம்ம வித்தை என்றழைக்கப்படும் இந்த குண்டலினி உபதேசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தக் காலத்தில் குறைந்தது 12 ஆண்டுகள் பிடித்தன. இதை ஒரு மறைபொருளாக, இரகசியமாகவே வைத்திருந்தார்கள். ஆனால் நம்முடைய மகான் அவர்கள் பல கஷ்டங்கள் பட்டு, பல ஆராய்ச்சிகளுக்குப் பிறகு குண்டலினி சக்தியை எழுப்பும் முறையைக் கண்டு பிடித்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தீட்சை கொடுத்துள்ளார்கள். ஞானப்பாலை ஊற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். பாத்திரமாகிய உங்கள் உடலையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். அசுத்தமான பாத்திரத்தில் நல்ல பாலை ஊற்றினால் பால் கெட்டுப் போய் விடுமல்லவா!"

"இந்தத் தீட்சையைப் பெற்றுக் கொள்வதற்கு ஆண், பெண் என்ற பாகுபாடு கிடையாது.. 18, 20 வயதையடைந்த ஆண், பெண் அனைவரும் அனுபவம் நிறைந்த ஒரு குருவிடமிருந்து இந்த தீட்சையைப் பெற்றுக் கொள்ளலாம். பேரின்பம் அடையலாம். நீங்கள் இருவரும் முதற்படியை இப்பொழுது பெற்றுக் கொள்ளுங்கள். இரண்டு வார காலங்கழித்து இரண்டாவது படியையும், அதற்கப்புறம் ஒரு வாரங்கழித்து மூன்றாம் படியையும் பெற்றுக் கொண்டு சந்தோஷமாக இருங்கள்."

**நான் :** "சாப்பாட்டு விஷயத்தில் ஏதாவது....?"

**குருஜி :** "உணவில் எவ்வித கட்டுப்பாடும் இல்லையென்றாலும் அடுத்த மூன்று வாரங்களுக்கு சைவ உணவை உண்பது நல்லது. உடல் உறவையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்."

**நான் :** (என் மனத்திற்குள் : "சிறுவனாக இருந்த பொழுது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இடையன்குடி, இட்டமொழி என்னும் ஊர்களில் படித்துக் கொண்டிருந்தேனே. 1950-ஆம் ஆண்டு, நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்த பொழுது, ஜோதிஷத்தைப் பற்றிய ஆர்வத்தை ஊட்டிய திரு. வடிவேல் அய்யா அவர்கள் இந்தத் தாரக மந்திரத்தையும் எனக்குச் சொல்லிக் கொடுத்தார்களே :

***'நான் மனத்தில் உறுதியுள்ளவனாவேன்,***
***அவ்வுறுதியை எப்பொழுதும் கைவிடேன்.***
***யாரும் என் மனத்தை வெற்றிக் கொள்ளுதல் முடியாது.***
***எனக்கு நிமிஷத்திற்கு நிமிஷம் மனவுறுதி அதிகமாகிறது.***
***வெற்றி வந்து விட்டது.***

***ஆத்ம சக்தி அதிகரித்து எல்லாரையும் அடக்கி ஆளப்போகிறது. நானே யோகாதிபதியாவேன்.'***

இந்த மந்திரத்தை தினந்தோறும் உச்சரித்து வருகின்ற நான் இன்று இந்த குருஜியிடம் குண்டலினி தீட்சை பெற்றுக் கொள்வதற்காக இங்கு வந்திருக்கிறேனே. இவர் என் மனத்தை வெற்றி கொண்டு, என் எண்ணங்களின் மீது ஆதிக்கம் செலுத்துவாரோ? இவரிடமிருந்து தீட்சை பெற்றுக் கொண்டால், இவர் சொல்லுகிற பிரகாரம்தான் நான் ஆட வேண்டுமா? இல்லை; இல்லை. அப்படியொன்றும் நடந்து விடாது. இவர் எனக்குத் தீங்கு செய்வார் என்று நான் நினைப்பது பெருந்தவறு."

"இந்த குருஜி என்னைவிட நல்லவராகத்தான் இருக்க வேண்டும். பார்த்தால் இயேசுவானவரைப் போல் தெரிகிறார். முகத்திலும் தெய்வீகக்களை இருக்கிறது. கண் சிமிட்டி சிரிக்கும் ஒரு வெள்ளை ரோஜாவைப் போல் இந்த கட்டிலில் அமர்ந்து இனிமையாகப் பேசுகிறாரே..."

"கிறிஸ்துவ ஜெப ஆராதனைகளில் கலந்து கொள்ளும் போது, 'என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன், ஏற்றுக் கொள்ளும் இயேசுவே' என்று மற்றவர்களோடு சேர்ந்து பாடியிருக்கிறேனே. 'ஒப்புக் கொடுப்பது' என்றால் என்ன? இயேசுவின் போதனைகளைக் கடைப்பிடித்து அவரோடு ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்வதுதானே! அவருடைய சித்தத்தின்படி நடப்பதுதானே! அப்படியென்றால், இந்த குருஜியையே இயேசுவானவராக நினைத்து ஏன் அவரிடம் என்னை ஒப்புக் கொடுக்கக் கூடாது? ஒப்புக் கொடுத்துத்தான் பார்ப்போமே!"

***புஷ்பராணி*** : (என்னைப் பார்த்து) : "எப்படி உட்கார வேண்டும் என்று தெரியவில்லையே."

***குருஜி*** : "ஒருவரையொருவர் தொடாது வசதியாக, நேராக உட்கார்ந்து கொள்ளுங்கள்."

***நான்*** : (வஜ்ராசனத்திலிருந்து மாறி சுகாசனத்தில் அமர்ந்து கொண்டே, என்னுடைய மனைவியைப் பார்த்து) : "ராணிம்மா, அந்த தட்சிணையை குருஜியிடம் கொடு."

***புஷ்பராணி*** : "குருஜி, இது எங்களுடைய அன்பின் காணிக்கை, தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்."

**குருஜி** : "ரொம்ப சந்தோஷம், அம்மா. ஏன் இவ்வளவு பணம் வைத்திருக்கிறீர்கள்?"

**புஷ்பராணி** : "குரு தட்சிணையாக இவர்களுடைய முப்பது வெள்ளியையும் என்னுடைய முப்பது வெள்ளியையும் சேர்த்து மொத்தம் அறுபது வெள்ளிதான் வைத்திருக்கிறோம், குருஜி."

**குருஜி** : "தட்சிணையாக நான் பெற்றுக் கொள்வது ஆள் ஒன்றுக்கு பதினோரு வெள்ளி இருபத்தைந்து காசுதான்."

**புஷ்பராணி** : "மன்னிக்க வேண்டும், குருஜி. தயவு செய்து வேண்டாம் என்று சொல்லி விடாதீர்கள்."

**நான்** : (என் மனத்திற்குள் எண்ணிக் கொள்கிறேன்) : "பணத்தின் மீதே கண்ணும் கருத்துமாய் இருக்கும் பல சாமியார்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். இவரோ பணத்தை ஒதுக்கித்தள்ளுகிறாரே. ஐயா, பணத்தின் மீது ஆசை வைக்காத உத்தமனாகவே நீங்கள் எப்பொழுதும் இருக்க வேண்டும். அதைத்தான் நான் விரும்புகிறேன்."

**குருஜி** : "நீங்கள் இருவரும் ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். மக்கள் உள்ளங்களில் அன்பின் விதைகளை விதைக்கவே நான் இங்கு வந்திருக்கின்றேன். இந்த குண்டலினி தீட்சையைப் பெற்றுக் கொண்ட பிறகு நன்றாய் தியானம் செய்து வாருங்கள். நாளடைவில் சந்தோஷமும் தெய்வீக அன்பும் உங்கள் உள்ளங்களில் குடியிருக்கும். இந்த சந்தோஷத்தையும் தெய்வீக அன்பையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். முன்னுதாரணமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டுங்கள். இதைத்தான் நான் எல்லா மக்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறேன்; அவர்களுடைய பணத்தையல்ல."

**நான்** : "குருஜி, இந்த தீட்சையைப் பெற்றுக் கொண்ட பிறகு ஒழுங்காக தியானம் செய்து வர வேண்டும் என்று சொன்னீர்கள். தியானம் செய்யும் பொழுது உங்களையே நான் நினைத்துக் கொண்டிருந்தால், பரமஹம்ஸ யோகானந்தருக்குத் துரோகம் செய்தவன் ஆகிவிடுவேன் அல்லவா?"

**குருஜி** : "தியானம் செய்யும் பொழுது நீங்கள் எந்தக்குருவையும் நினைக்கத் தேவையில்லை. ஆகையால் நீங்கள் யாருக்கும் துரோகம் செய்யப் போவதுமில்லை."

ஞானதீட்சையைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பொழுது எங்களை தயார் படுத்திக் கொள்கிறோம். கைக்கடிகாரம் 9.15க் காட்டுகிறது. ஒன்றரை மணி நேரம் குருஜியோடு பேசிக் கொண்டிருந்தது எங்களுக்குத் தெரியவில்லை. அறைக்கு வெளியே காத்துக் கொண்டிருக்கும் மக்களின் பேச்சுக் குரல் சில வேளைகளில் மெதுவாகக் கேட்கிறது. தான் அமர்ந்திருந்த கட்டிலிலிருந்து இறங்கி வந்து எங்கள் அருகே நிற்கும் குருஜியை மீண்டும் ஒரு முறை உற்று கவனிக்கிறேன். பாதங்களில் வெள்ளைக் காலுறைகள் (socks) அணிந்திருக்கிறார்கள். உடுத்தியிருக்கும் வேஷ்டி, பனியன், அங்கவஸ்திரம் எல்லாமே சுத்த வெள்ளைதான். கட்டையான தடித்த கைவிரல்களில் ஒழுங்காக வெட்டப்பட்ட நகங்கள் தெரிகின்றன.

சித்தாசனத்தில் அமர்ந்து, முதுகந்தண்டு, கழுத்து, தலை ஆகிய உறுப்புகளை நேர்க்கோட்டில் வைத்துக் கொள்ளச் சொல்லுகிறார்கள் குருஜி. அப்படியே செய்கிறோம். மூக்கு நுனியைப் பார்த்தவாறே திருஷ்டியை புருவ மத்திக்குக் கொண்டுவந்து, மூச்சை நன்றாக உள்ளே இழுத்து வெளியே விடுகின்றோம். கைகள் இரண்டையும் முழங்கால்கள் மீது வைத்துக் கொண்டு, பெரு விரலோடு ஆள்காட்டி விரலை அழுத்தித்தேய்த்து விடுகிறோம். அடித்தாடைகளையும் ஒன்றோடொன்று அழுத்தி அழுத்தி விட்டுக் கொள்கிறோம். மூன்று நிமிடங்களுக்கு மேல் மூக்கு நுனியையே கூர்ந்து கவனிப்பது சற்று சிரமமாகத் தெரிகிறது.

குருஜி எங்களுக்குப் பின்னால் நின்று கொண்டு தனது வலது கையால் எங்கள் முதுகந்தண்டின் அடிப்பகுதியைத் தட்டுகிறார்கள். அதன்பிறகு, தனது வலது ஆள்காட்டி விரலை சற்று அழுத்திக் கொண்டே, மூலாதாரப் பகுதியில் தொடங்கி முதுகந்தண்டு, பிடரி, உச்சந்தலை, நெற்றி, ஆகிய பகுதிகளைக் கடந்து, புருவ மத்தியில் அந்த ஆள்காட்டி விரலை வைத்து சற்று நேரம் அழுத்துகிறார்கள். வாசனை பொருந்திய தைலத்தை புருவ மத்தியில் தடவுகிறார்கள். பின்பு ஒரு சிறு ஆயுதத்தைக் கொண்டு புருவ மத்தியில் லேசாக ஒரு முறை குத்துகிறார்கள். அப்பொழுது எறும்பு கடித்ததைப் போன்று இருக்கிறது. கண்களை மூடி, கைகளை கோர்த்த நிலையில் வைத்துக்கொண்டு புருவ மத்தியிலேயே முழு கவனத்தையும் நாங்கள் செலுத்துகிறோம். திடீரென்று மணியோசை கேட்கிறது. கண் விழித்துப் பார்க்கிறேன். குருஜிதான் சிறிய மணியொன்றை என்னுடைய நெற்றிக்கு அருகில் பிடித்துக் கொண்டு, மீண்டும் அந்த மணியை அடிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். "திறக்கப்பட்ட உங்கள் நெற்றிக் கண்ணின் வழியாகவே இந்த மணியோசையைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறியவாறு அந்த மணியை மேலும்

இரண்டு முறை அடிக்கிறார்கள். அதன்பிறகு, ஒரு சிறு துண்டு கல் கண்டை என்னுடைய வாயில் வைத்து அதன் ருசியை நெற்றிக் கண்ணின் வழியாக கிரஹிக்கச் சொல்லுகிறார்கள். புருவமத்தியிலேயே முழு கவனத்தையும் செலுத்த முயற்சிக்கிறேன். என்னுடைய உள்ளத்தில் சந்தோஷம் பொங்கி வழிகிறது.

குருஜி மகான் அவர்களிடமிருந்து ஞானதீட்சையைப் பெற்றுக் கொண்ட நாங்கள் இருவரும் கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி அவர்களை வணங்குகிறோம். ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறோம். புருவ மத்தியில் ஏதோ ஊர்ந்து செல்வதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது. " ஹா! ஹா! என்னுடைய நெற்றிக்கண் திறந்து விட்டது" என எண்ணிக் கொள்கிறேன். என் மனைவியின் நெற்றியைப் பார்க்கிறேன். அவருடைய புருவ மத்தியில் எவ்வித மாற்றமும் தெரியவில்லை. வழக்கம் போல் நெற்றியில் ஒட்டப் பட்டுள்ள சிவப்புப் பொட்டு பளிச்சென்று தெரிகிறது.

பக்கத்திலுள்ள மேசை மீது சில புத்தகங்கள் அடுக்கிவைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு, மீண்டும் கட்டிலில் ஏறி அமர்ந்து கொள்கிறார்கள் குருஜி மகான் அவர்கள். "நான் - கடவுள்" என்னும் அந்த புத்தகத்தின் முதல் பக்கத்தில் சில வார்த்தைகளை எழுதி கையொப்பமிட்டு, அதை என் மனைவியிடம் கொடுக்கிறார்கள். அவர்கள் உபயோகிக்கும் பேனா சற்று விநோதமாகத் தெரிகிறது. பேனாவின் ஒரு முனையால் எழுதுகிறார்கள். மறு முனையைத் திருகினால் ஒரு சிறிய ரப்பர் ஸ்டாம்ப் வெளியே வருகிறது. அந்தப் புத்தகத்தில், "என்றும் நிறைவுடன் வாழ்வீர், சந்தோஷம்" என்ற வாசகம் எழுதப் பட்டிருப்பதைப் பார்த்து நாங்களிருவரும் மகிழ்ச்சியடைகிறோம்.

டிவைன் மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கும் குழந்தைகளைப் பற்றியும் அப்பள்ளிக்கூடத்தின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றியும் குருஜியிடம் கேட்டு விரிவாகத் தெரிந்து கொள்கிறோம். இப்பள்ளியின் வளர்ச்சிக்காக ஏதாவது ஒரு தொகையை நன்கொடையாகக் கொடுக்கவேண்டும் என்ற உறுதியான எண்ணம் ஏற்படுகிறது. என் எண்ணத்தைப் புரிந்து கொண்ட என் மனைவி, குருஜியைப் பார்த்து, "குருஜி, உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நீங்கள் நடத்திவரும் டிவைன் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடத்திற்கு வருடந்தோறும் ஒரு சிறு தொகையை நன்கொடையாக கொடுக்க விரும்புகிறோம்" எனக் கூறிவிட்டு என்னை எட்டிப் பார்க்கிறார். நானும், "ஆமாம்" என தலையை அசைக்கிறேன்.

**குருஜீ :** "எந்த நோக்கத்தோடு நீங்கள் இந்தப் பணத்தைக் கொடுக்க

விரும்புகிறீர்கள்? என்னிடமிருந்து எதைத்தான் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?"

**நான் :** "குருஜி, பதவி உயர்வு கிடைக்க வேண்டுமென்றோ, அல்லது பிரச்சனைகளே இல்லாத வாழ்க்கை அமைய வேண்டுமென்றோ நான் உங்களைத் தேடி வரவில்லை. நீங்கள் போதிக்கும் தத்துவம் எனக்குப் பிடித்திருக்கிறது. இந்த நல்ல தத்துவத்தை குழந்தைகள் மத்தியிலும் நீங்கள் போதித்து வருகிறீர்கள். நீங்கள் செய்யும் இந்த இறைத்தொண்டு மென்மேலும் வளர்ச்சி காண வேண்டுமென்றால், நிச்சயம் உங்களுக்குப் பணம் தேவைப்படுமே, குருஜி! தவிர, பள்ளிக் குழந்தைகளுக்குத் தேவைப்படும் விளையாட்டுச் சாமான்கள், லைப்ரரி புஸ்தகங்கள் வாங்குவதற்கும் பணம் தேவைப்படுமல்லவா?"

**புஷ்பராணி :** "எங்கள் மூத்த மகள் சாந்தி சென்னையிலுள்ள செயின்ற் பெயின்ஸ் பள்ளிக்கூடத்தில் பிளஸ் 2 படித்துக் கொண்டிருக்கிறாள். மகளை மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பதற்காக ஜூலை மாத வாக்கில் நான் சென்னை செல்கிறேன். என்னுடைய பெற்றோர்களும் தம்பிமார் நால்வரும் சென்னையில் தான் வசிக்கின்றனர். என்னுடைய தாயாரையுங் கூட்டிக் கொண்டு உங்களைப் பார்க்க ஈரோடு வருவேன். டிவைன் மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளைப் பார்த்துப் பேச வேண்டும்; அவர்களோடு சில நாள்கள் தங்கியிருக்க வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. கண்டிப்பாய் உங்களை வந்து பார்ப்பேன், குருஜி."

**குருஜி :** "ரொம்ப சந்தோஷம், அம்மா."

**நான் :** "மன்னிக்க வேண்டும், குருஜி. நீங்கள் அடிக்கடி 'சந்தோஷம்' என்ற சொல்லை உபயோகிக்கின்றீர்களே, இதுவும் ஓர் ஐந்தெழுத்து மந்திரமா?"

**குருஜி :** " 'சந்தோஷம்' என்ற சொல் உண்மையிலேயே ஒரு சிறந்த ஐந்தெழுத்து மந்திரம்தான். இந்த வார்த்தையின் பொருளையுணர்ந்து யார் அடிக்கடி 'சந்தோஷம், சந்தோஷம் ' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் மனத்தில் அவர்களையறியாமலேயே சந்தோஷம் குடிகொள்கிறது. நம்மைப் போன்றே மற்றவர்களும் சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்திற்கு வழிகாட்டும் சொல்லாய் இந்தச் சொல் அமைகிறது."

**நான் :** " 'சந்தோஷம்' என்ற சொல்லுக்கும், 'அன்பு', 'இன்பம்'

போன்ற வார்த்தைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதல்லவா?"

**குருஜீ :** "உண்மைதான். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று திருமூலர் சொல்லும் பொழுது அவர் சிற்றின்பத்தைக் குறிப்பிடவில்லை. பேரின்பத்தைப் பற்றிதான் பாடியிருக்கிறார். பேரின்பத்தை அனுபவிக்கும் பொழுது வார்த்தைகளால் விவரிக்க முடியாத சந்தோஷம் ஏற்படுகிறது. பிறரிடம் அன்பு செலுத்தும் போதும் நம்முடைய உள்ளத்தில் சந்தோஷம் நிறைந்திருக்கும். அன்பு, இறைத் தன்மையுடையது. அதனால்தான், 'அன்பே சிவம்', 'God is love', 'இறைவன் அன்பாகவே இருக்கிறார்' என்றெல்லாம் கூறுகிறோம்."

**நான் :** "மணி பதினொன்றாகப் போகிறது குருஜி. இவ்வளவு நேரம் உங்களோடு பேசுவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை. இது எங்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம், குருஜி."

**புஷ்பராணி :** "ஆமாம் குருஜி; உண்மையிலேயே மனத்திற்கு அதிக சந்தோஷமாய் இருக்கிறது."

குருஜியிடமிருந்து விடைபெற்றுக் கொள்வதற்குத் தயாராகிறோம். "சற்று நேரம் கண்களை மூடி தியானத்தில் இருங்கள்" என குருஜி கூறுகிறார்கள். சுகாசனத்தில் அமர்ந்த நிலையில், கண்களை மூடி, திருஷ்டியை புருவ மத்தியில் நிறுத்த முயற்சிக்கிறேன். பல்வேறு எண்ணங்கள் அங்குமிங்கும் தாவித்திரிந்த போதிலும் மனத்தில் ஆனந்தம் நிறைந்திருப்பதை நன்றாக உணர முடிகிறது. இடையிடையே குருஜி எங்கள் மீது சொரியும் பூவிதழ்கள், தலையிலும், தோள்களிலும், மடியிலும் விழுவது ஒரு புது அனுபவமாக அமைகிறது. சுமார் ஐந்து நிமிடங்கள் கழித்து, "சரி, போதும்" என குருஜி கூறுகிறார்கள். கண்களைத் திறந்து, எங்கள் முன்னால் அமர்ந்திருக்கும் குருஜியை வீடியோவில் பார்த்த குருஜியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன். ஆனால் எவ்வித வித்தியாசமும் தெரியவில்லை. தெரிவதெல்லாம் கள்ளங் கபடற்ற அதே புன்சிரிப்பு, அதே இனிய பேச்சுதான்.

குருஜியின் பாதங்களைத் தொட்டு அவர்களிடமிருந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்கிறோம். மிகுந்த மகிழ்ச்சியோடு நாங்கள் இருவரும் அந்த அறையை விட்டு வெளியே வருகிறோம். குருஜி மகான் அவர்களும் எங்களைப் பின் தொடர்ந்து வெளியே வருகிறார்கள். அவர்களுடைய கையில் ஒரு சிறிய காமரா தொங்குகிறது. அந்த

வீட்டிற்கு முன்னாலுள்ள அழகிய பூஞ்செடிகளின் மத்தியில் எங்களை நிற்க வைத்து இரண்டு படம் பிடித்துக் கொள்கிறார்கள். பூக்களுக்கு மத்தியில் சிரிக்கும் ஒரு வெள்ளை ரோஜாவாக அவர்கள் அப்பொழுது எனக்குத் தோன்றுகிறார்கள்.

மனத்தில் சந்தோஷத்தையும், கைகளில் குருஜி ஆசீர்வதித்துக் கொடுத்த பழங்களையும் ஏந்திக் கொண்டு எங்களுடைய காரில் ஏறுகிறோம். "ஐயா! உங்களோடு இவ்வளவு நேரம் பேசியது எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறது. மற்றவர்களுக்கும் இப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிட்ட வேண்டும், அவர்களும் இந்த சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும்" என எண்ணிக் கொண்டே காரை ஸ்டார்ட் பண்ணுகிறேன்.

எங்களுக்கு ஏற்பட்ட இந்த இனிய அனுபவத்தைப் பற்றியும் குருஜியின் போதனைகளைப் பற்றியும் பேசிக் கொண்டு வீடு திரும்புகிறோம். இயேசு நாதரின் அருள் மொழிகளும் இப்படித்தானே பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களில் ஆன்மீக உணர்வுகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தூண்டி விட்டிருக்கும் என எண்ணுகிறேன். திடீரென்று, இராமலிங்க அடிகள் அவர்களோடும் குருஜியை ஒப்பிட்டுப் பார்க்கிறது என் மனம். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வடலூர் வள்ளலே; கன்றுகள் கதறக் கருத்திற்கலங்கிய கலங்கரை விளக்கமே; தீ மொழி கேட்டுத் தீயென நொந்த நற்றமிழ்க் கடலே; எளியரை வலியர் அடிப்பதைக் கண்டு ஏங்கிய அருட்சுடரே! உங்களுக்கும் இந்த குருஜிக்கும் இடையே நிலவும் உறவு என்ன உறவோ? ஐயா." என்ற கேள்வி என் மனத்தில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

இரண்டு வாரங்கள் கழித்து மீண்டும் குருஜி மகான் அவர்களைச் சந்திப்போம் என்னும் ஆவலில் வீடு வந்து சேர்கிறோம்.

# பின் குறிப்புகள்

(1) துன் சம்பந்தன் தமிழ்பள்ளியின் தலைமையாசிரியர் திரு. கு. துரைசாமி அவர்கள் தம் மனைவியோடு 1992-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஈரோடு சென்று, குருஜி மகான் அவர்களோடு ஒரு மாதகாலம் தங்கியிருந்து, பெறவேண்டிய அகத்துவ, யோகப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு மெய்ஞ்ஞானாசிரியராக மலேசியா திரும்பினார்கள்.

(2) 02-05-1900ல் தோன்றிய ஜகத் மகாகுரு ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள், 07-01-1981ல் மறைந்தார்கள். 11 1/2 வயது சிறுவனாக இருக்கும்பொழுது, அதாவது 11-11-1911ல், அவர்களுக்கு ஞானோதயம் கிட்டியது. 07-01-1938ல் ஞானோபதேசம் பெற்றார்கள்.

(3) தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளித்த மகாகவி சுப்ரமணிய பாரதியார் 11-12-1882ல் எட்டயாபுரத்தில் பிறந்தார். தனது 15-வது வயதில் செல்லம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். நாலாண்டுகள் அலஹாபாத் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று சம்ஸ்கிருதம், ஹிந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். 1921ல் வயிற்றுக்கடுப்பு நோயால் மரணமடைந்தார்.

(4) சின்னு என்னும் இயற்பெயர் கொண்ட சுவாமி சித்பவானந்தர், பொள்ளாச்சிக்கு அருகிலுள்ள செங்குட்டைபாளையம் என்னும் கிராமத்தில் 11-3-1898ல் பிறந்தார். சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் B. A. நான்காம் ஆண்டு வரை கல்வி கற்ற பின், கல்கத்தாவுக்குப் பக்கத்திலுள்ள பேலூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா மடத்தில் தங்கியிருந்து சமஸ்கிருதமும் கற்றுக் கொண்டார். 1926ல் சந்நியாச தீக்ஷை பெற்றார். திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள திருப்பராய்த்துறை என்னும் ஊரில் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் என்ற ஸ்தாபனத்தை நிறுவி இறைத்தொண்டு செய்து வந்தார். நாற்பதுக்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதியுள்ளார். நோய்வாய்ப்பட்டு 16-11-1985ல் மறைந்தார்.

(5) ***பரமஹம்ஸ யோகானந்தர்***
**தோற்றம் : 5-1-1893; மறைவு : 7-3-1952**
***இயற்பெயர் : முகுந்த லால் கோஷ்.***
சிறுவயது முதலே இறைவன் மீது அன்பு செலுத்திய

முகுந்தலால் தனது 17வது வயதில், சுவாமி ஸ்ரீயுக்தேஷ்வர் கிரி என்ற ஞானகுருவிடம் தஞ்சம் அடைந்தார். அன்னாரிடமிருந்து ஆன்மீகத்துறையில் பெறவேண்டிய சகல ஞானத்தையும் பெற்றுக்கொண்டு, 1920-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்றார். இமயமலைச்சாரலில், பத்ரி நாராயண் கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு குகையில் பல நூற்றாண்டுகளாக தவமியற்றிவரும், பாபாஜி என்னும் ஞான சித்தரின் கட்டளைப்படி கிரியா யோகத்தை அமெரிக்காவிலும் இந்தியாவிலும் பரப்புவதற்கு வழி வகுத்தார். இந்து, கிறிஸ்துவ சமயங்களில் இருக்கும் ஒற்றுமைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டி, தாம் நிறுவிய SELF-REALIZATION FELLOWSHIP மூலம் இறைவனின் அன்பை மக்களிடம் எடுத்துக் கூறினார். உடலை விட்டு உயிர் பிரியும் நேரத்தை முன்கூட்டியே தனது பிரதம சிஷ்யையான தயாமாதாவிடம் தெரிவித்தார். அதன்படியே 7-3-1952ல் உயிர் பிரிந்தது.

(6) **நாஸ்த்ரடமஸ் (NOSTRADAMUS)**

**தோற்றம் : 14-12-1503 மறைவு : 2-7-1566**

**இயற்பெயர் : MICHEL DE NOSTREDAME**

யூத வம்சாவழியைச் சேர்ந்த பிரெஞ்சு மருத்துவர். ஜோதிடக் கலையிலும் கைதேர்ந்தவர். பிரெஞ்ச் அரச குடும்பத்தினரின் ஜாதகங்களைக் கணித்தவர். உலகில் நடைபெறப் போகும் சம்பவங்களைக் குறித்து தீர்க்கதரிசனமாக, செய்யுள் நடையில் 1555-ஆம் ஆண்டு ஒரு நூல் வெளியிட்டுள்ளார்.

(7) ***திருமூலர்***

***இயற்பெயர் : சுந்தரநாதர் காலம் : கி.மு. 200***

நந்திதேவர் என அழைக்கப்படும் மகரிஷி நந்திநாதரின் சிஷ்யர். பதஞ்சலி முனிவரின் நண்பர். 3,047 செய்யுள்கள் அடங்கிய திருமந்திரம் என்னும் நூலை இயற்றிய ஜீவன் முக்தர். சைவ ஆகமங்கள், வேதங்கள், நாத சம்பிரதாய போதனைகள் ஆகியவற்றைப் பிழிந்து இந்நூலில் தந்துள்ளார். சைவ சித்தாந்தம் தென்னாட்டில் பரவுவதற்கு வழி செய்தவர். பன்னிரு திருமுறைகளில், காலத்தால் மூத்த நூல் இவருடைய திருமந்திரம் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவாகும். மூலன் என்ற இடையன் திடீரென்று மரணமுற்றதால், பசுக்கள் கண்ணீர் சிந்துவதைப் பார்த்து இரக்கப்பட்டு, மூலனின் உடலில் புகுந்து அவனை உயிர்ப்பித்து, பசுக்களை சந்தோஷப்படுத்தியவர். மரப்பொந்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த தன்னுடைய உடல் மாயமாய் மறைந்து போனதினால், மூலனுடைய உடலிலேயே குடியிருந்து சைவ சித்தாந்தத்தைப் போதித்த யோக சித்தர்.

(8) ***இயேசு கிறிஸ்து***

1998 ஆண்டுகளுக்கு முன்பு, யூதேயா தேசத்தில், ஓர் எளிய யூத குடும்பத்தில் பிறந்த இவர் சிறு வயதிலிருந்தே தேவாலயத்திற்குச் செல்வதிலும் மோசேயின் நியாயப் பிரமாணங்களை வாசிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினார். பன்னிரண்டு வயது முதல் முப்பது வயது வரை அவர் எங்கு இருந்தார், என்ன செய்தார் என்ற விபரங்கள் பரிசுத்த வேதாகமத்தில் கொடுக்கப்பட வில்லை. எஸ்ஸீன் (ESSENE) என்று அழைக்கப்படும் யூத துறவியர் குழுவில் இவர் முக்கிய பதவி வகித்திருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். தனது முப்பதாவது வயதில் ஞானஸ்நானம் என்னும் ஞானதீட்சையைப் பெற்றுக் கொண்டார். நாற்பது நாட்கள் உண்ணாவிரதமிருந்து, காய சுத்தி செய்து கொண்டு, சித்திகளையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொண்டார். அருள் ஞானவள்ளலாகத் திகழ்ந்த இவர், சுமார் மூன்றரை ஆண்டுகள் மக்கள் மத்தியில் இறை ஊழியம் செய்து பக்தி மார்க்கத்திற்கு வித்திட்டார். சாதாரண மக்களை சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டு, இறைவனின் அன்பைப் பற்றிய நல்ல செய்தியை (சுவிசேஷத்தை) எல்லா மக்களிடத்திலும் அறிவித்தார். பல அற்புதங்களைச் செய்தார். வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தினார். தன்னை இறைமகன் என்று கூறிக்கொண்டதைக் கேட்ட மதபோதகர்கள் அவரை வெறுத்தார்கள். அதனால், தெய்வ நிந்தனை செய்ததாக குற்றஞ்சாட்டி, ரோம அரசாட்சியாளர்களைக் கொண்டு அவரை சிலுவையில் அறைந்து கொன்றார்கள். மூன்றாம் நாள் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கை கிறிஸ்துவ சமயத்தின் ஆணிவேராக விளங்குகிறது.

(9) ***ஜார்ஜ் பெர்னர்ட் ஷா* (GEORGE BERNARD SHAW)**

**தோற்றம் : 26-7-1856 மறைவு : 2-11-1950**

கூர்மதியுடைய ஐரிஷ் நாடகாசிரியர். ஆங்கில மொழியில் ஐம்பது நாடகங்கள் எழுதியுள்ளார். சோஷியலிசக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். சிறந்த சங்கீத, நாடக திறனாய்வாளராக விளங்கினார். பல்லாயிரக்கணக்கான சொல் நயம் பொருந்திய கடிதங்களை எழுதியுள்ளார்.

# சினம் தவிர்ப்பது எப்படி?

(1) நம்மை சிந்திக்க விடாமல் தடுக்கும் முதல் குணம் கோபம். கோபம், கோபமுற்றவனையும் அவனைச் சார்ந்து இருப்பவர்களையும் ஒரு சங்கிலித் தொடர்போல் பாதித்து பெருத்த அழிவை ஏற்படுத்தும்.

(2) கோபத்திற்கு அடிப்படையான காரணம் எதிர்பார்ப்பு. நமக்குப் பிடிக்காததை பிறர் செய்யும் பொழுதும், நாம் நினைத்தது நடக்காத பொழுதும், நாம் கேட்டது கிடைக்காத பொழுதும் கோபம் வருகின்றது.

(3) "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே" என்று கீதை கூறுகின்றது. சிந்தித்துப் பாருங்கள். நமக்கு எவரிடமும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாத போது நமக்குக் கோபம் வருகின்றதா? வரவே வராது.

(4) மற்றவர்களை மனமாரப் பாராட்ட வேண்டும். பாராட்டும் பொழுது நம்மிடம் தோன்றும் கோப உணர்ச்சி மறைந்து மலர்ச்சி தோன்றுகிறது.

(5) காரண காரியங்களை சற்றுப் பொறுமையாக அறிய முற்படும் பொழுது கோபம் மறைந்து அமைதி நிலவுகின்றது.

(6) பிறரை புரிந்து கொள்வதற்கு முன்பு நம்மை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம்மை நாம் புரிந்து கொண்டு நடந்தோமானால் மற்றவர்களையும் புரிந்து கொண்டு கோபதாபங்களைக் கடந்த நிலையில் வாழலாம்.

(7) நம்மைப் புரிந்து கொண்டு வாழ ஒரே மந்திரம் இந்த மெய்யுணர்வுதான். குணங்களைக் கடந்த உயர் நிலைக்குச் செல்வதற்கு சுழிமுனையைக் கடந்தால்தான் முடியும்.

(8) புருவ மத்தியில் மெய்யுணர்வு அதிகரிக்கும் பொழுது கோபம் தன்னால் அடங்கி விடுகின்றது. நாம் உயிர் வாழ்வதற்கு எப்படி மூன்று வேளை உணவு உட்கொள்கின்றோமோ அதுபோல "கோபம்" என்ற தீராத நோயை தீர்ப்பதற்கு அருமருந்தாகிய தியானம் மிகவும் தேவை.

**குருஜி டாக்டர் பரஞ்சோதி மகான் அவர்களின் அருளுரை**

"உயர்ஞான தீபம்" அக்டோபர் 1993

# குடும்பப் பெண்களின் நற்பண்புகள்

1. பொறுமை; அடக்கம்; பணிவு.
2. கல்வி; கற்பு; பதி பக்தி.
3. மன்னிக்கும் இனிய சுபாவம்; சகிப்புத்தன்மை.
4. சுத்தம்; நளினம்; அழகுரசனை.
5. தன்நலனை ஒதுக்கி வைத்தல் (தியாகம்); "தன்துயர் காணா தகைசால் பூங்கொடி" -இளங்கோ.
6. இறை வாஞ்சை; தெய்வ சிந்தனை.
7. சிக்கனம் (சம்பளத்தில் 10% சேமித்தல்)
8. அச்சம்; மடம்; நாணம்; பயிர்ப்பு (அருவருப்பு) ? ? !
9. கணவரிடமும் குழந்தைகளிடமும் பூரண அன்பு செலுத்துதல்.
10. சுவையான உணவு சமைத்தல்; குடும்பத்தாரின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துதல்.
11. உழைப்பு; உற்சாகம்; ஊக்கம்; துணிவு; உறுதி.
12. கணவனும் மனைவியும் ஒரே கண்ணோட்டத்தோடு வாழ்க்கைப் பிரச்சனைகளை சமாளித்தல்.
13. கணவனிடம் நம்பிக்கை; பரஸ்பர மரியாதை.
14. கணவனின் நுண்ணுணர்ச்சிகளை மதித்தல்.
15. கணவரோடும் குழந்தைகளோடும் சேர்ந்து உண்ணுதல்.
16. கணவனுக்குத் தூண்டுகோலாக இருந்து காரியம்யாவிலும் கை கொடுத்தல்.
17. சிந்தித்து அளவோடு பேசுதல்; மனந்திறந்து பேசுதல்.
18. மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்க்கை நடத்துதல்.
19. வயோதிகப் பருவத்தில் பண்பும் பாசமும் தலைதூக்கி நிற்க வேண்டும். (அழகை விட அன்பே பெரியது).
20. வாழ்க்கைப் பாதையில் குழந்தைகளுக்கு வழிகாட்டியாக இருப்பது.

**-மெய்ஞ்ஞானாசிரியர் வில்லியம் பூபால ஜோஸஃப்**

தாப்பா பேராக் -மலேசியா

# THE ERA OF PEACE AND PROSPERITY

*"When the perfect order prevails, the world is like home shared by all. Virtuous and worthy men are elected to public office, and capable men hold posts of gainful employment in society; peace and trust among all men are the maxims of living. All men love and respect their own parents and children, as well as the parents and children of others. There is caring for the old; there are jobs for the adults; there is nourishment and education for the children. There is a means of support for the widows, and the widowers; for all who find themselves alone in the world; and for the disabled. Every man and woman has an appropriate role to play in the family and society. A sense of sharing displaces the effects of selfishness and materialism. A devotion to public duty leaves no room for idleness. Intrigues and conniving for ill gain are unknown. Villains such as thieves and robbers do not exist. The door to every home need never be locked and bolted by day or night. These are the characteristics of an ideal world, the commonwealth state."*

-CONFUCIUS (551-479 B.C.)

## LET ME SOW LOVE

*Lord, make me an instrument of Your peace,*
*Where there is hatred, let me sow love;*
*Where there is injury, pardon;*
*Where there is doubt, faith;*
*Where there is despair, hope;*
*Where there is darkness, light;*
*And where there is sadness, joy.*
*O divine Master, grant that I may not*
*So much seek to be consoled as to console;*
*To be understood as to understand;*
*To be loved as to love;*
*For it is in giving that we receive;*
*It is in pardoning that we are pardoned;*
*And it is in dying*
*That we are born to eternal life.*
*AMEN*

***(St. Francis of Assisi (1182-1226 A.D.)***
*Italian mystic and preacher.*

## SPREADING DIVINE JOY

*Beginning with the early dawn each day, I will radiate joy to everyone I meet. I will be mental sunshine for all who cross my path. I will burn candles of smiles in the bosoms of the joyless. Before the unfading light of my cheer, darkness will take flight.*

*Let my love spread its laughter in all hearts, in every person belonging to every race. Let my love rest in the hearts of flowers, of animals, and of little specks of stardust.*

*I will try to be happy under all circumstances. I will make up my mind to be happy within myself right now, where I am today.*

*Let my soul smile through my heart and let my heart smile through my eyes, that I may scatter Thy rich smiles in sad hearts.*

*I will always behold in my life the perfect, healthy, all-wise, all-blissful image of God.*

EXCERPTED FROM
"METAPHYSICAL MEDITATIONS"
BY PARAMAHANSA YOGANANDA



திருவள்ளுவர்

காலம்:- கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

# திருக்குறள்
## வள்ளுவன் தந்த பொதுமறை

(1) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(2) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(3) சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

(4) ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

(5) அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

(6) தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.

(7) தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

(8) இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

(9) யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

(10) எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

வளர்க மெய்ஞ்ஞானம்,

வாழ்க சமாதானம்;

உலக நலம் காப்போம்,

உலக அமைதி காப்போம்.

கி.பி. இரண்டாயிரத்திற்குள்

சத்திய யுகம் அமைப்போம்.

சந்தோஷம்! சந்தோஷம்!! சந்தோஷம்!!!

**GURUJI DR. PARANJOTHI MAHAN,**
UNIVERSAL PEACE SANCTUARY,
17. CHINNA MARIAMMAN KOVIL STREET,
KARUNGAL PALAYAM.
ERODE - 638003
TAMIL NADU, INDIA.
(TELEPHONE : 0424 - 213383)

Jelapang P.I. Tel : 05-5268855 Tel/Fax : 05-5267022